உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 35 | நள — ஆவணி — 10—9—76 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## நாடு செழிக்க நல்லறம் போற்றுவீர் !

உலகம் நிலைத்து நன்முறையில் இயங்குவதற்கு அடிப்படைக் காரணம் அறமும் அறவுணர்வுபடைத்தவர்களுமே ஆகும். அறவுணர்வுடன் அறநெறி நிற்போரைப் பண்புடையார் என்று கூறுகிறார் திருவள்ளுவர். அப்படிப்பட்டவர் ஒருசிலராகத்தான் இருக்கமுடியும். அந்த ஒருசிலராலேதான் உலகம் நன்கு இயங்கி வருகிறது. இக்கருத்தைத் திருவள்ளுவர்,

" பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வதுமன் "

என்ற குறள் மூலம் தெள்ளத்தெளிய அழுத்தம் திருத்தமாக அறிவிக்கின்றார். திருவள்ளுவரேயன்றி புறநானூற்றுப் புலவரும் பண்புடையவர்களாலேயே இவ்வுலகம் நிலைத்துநிற்கின்றது என்பதை அறுதியிட்டு உறுதிபெறக் கூறுகின்றார்.

" உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே "

—பாண்டியன் இளம்பெருவழுதி.

மரத்திற்கு அடிப்படை ஆணிவேர். மரம் செழித்து, தழைத்து, காய்த்து, கனிந்து சிறக்கவேண்டுமானால் ஆணிவேர் இன்றியமையாதது. அதுபோன்றே நாடும் - உலகமும் செழித்து ஓங்கி வளரவேண்டுமேயானால் அதற்கு அடிப்படை அறமாகிய வேர் உரம் பெற்றுத் திகழவேண்டும். அவ்அறமாகிய ஆணிவேரே அறநிலையங்களாகிய திருமடங்களும் திருக்கோயில்களுமேயாம். மரத்தின்வேர் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் உறுதியாக இருந்து மரத்தைப் பாதுகாக்கின்றது. அதே போன்று அறநிலையங்களும் திருக்கோயில்களும் தான் செய்யும் பணியை விளம்பரமாக வெளிப்படுத்திக்கொள்ளாமல் அடங்கி இருந்தே உலகத்தைக் காக்கின்றன; தமக்கென்று எதையும் செய்துகொள்ளாமல் பிறர்க்காகவே – உலகம் வாழ்வதற்காகவே இவ்வறநிலையங்கள் தோன்றின. சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க, சமுதாய மக்கள் தார்மிக உணர்வுடன் வாழ, ஒல்லும் வகையெலாம் ஓயாது பணியாற்றிவருகின்றன. அறநிலையங்களும் திருக்கோயில்களும் உலக நன்மைக்காகவே பயன்பட்டு வருகின்றன என்பதைச் சிந்தித்து உணர்வோர் நன்குதெளிவர்.

அறநிலையங்களாகிய திருக்கோயில்களும் திருமடாலயங்களுமே நாட்டின் உயிர் மூச்சுக் காற்றாக விளங்குவன. இவை பத்தாண்டுக் காலமாகச் சரிவர நடப்பதற்குப் போதிய பொருள்வசதி இல்லாமல் குன்றிவருகின்றன. இதை அவ்வப்போது நாளேடுகளும், மாத வார இதழ்களும் நாட்டுமக்களுக்கு நன்கு அறிவித்து வருகின்றன. வேருக்குத் தண்ணீர் விட்டால் தான் மரம் செழிக்கும். அறநிலையங்களும் அறமும் செழிப்பாக இயங்கினால்தான் நாடும் – நாட்டுமக்களுடைய நல்வாழ்வும் செழிக்கும். அறமும், அறநிலையங்களும் செழிப்பாக நடைபெறாவிடின் நாடும், நாட்டு மக்களும் நலம் இழப்பர். இதனை,

" முன்னவனர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே "

என்ற பாடலில் திருமூலர் தெளிவாக இயம்பி உள்ளார். அண்மையில் சில ஆண்டுக்காலமாக அறநிலையங்களுடைய செயல்முறைகள் நடைபெருமல் தடைபட்டு வருகின்றன. வான் பொய்ப்பதும், வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பொய்ப்பதும், வளம் சுருங்குதலால் நாட்டில் கன்னம், களவு மிகுதலும், மக்களிடையே பூசல்களும், கள்ளக்கடத்தல், பதுக்கல், விலை ஏற்றம் முதலியவைகளுமே நாம் அன்றாடம் காணும் காட்சிகளாகிவிட்டன. இத்தகு சீர்கேடான நிலை மாறவேண்டுமானல் மக்களிடையே அறவுணர்வும், குறிப்பாக அறநிலையங்களுக்குச் செலுத்தவேண்டியவற்றைத் தவருது செலுத்தவேண்டும் என்ற நல்லுணர்வும் செம்மையாகவளர்க்கப் படல் வேண்டும். அறநிலையங்களையும் சொத்துக்களையும் அன்னியர் சொத்துக்களைப்போல நினைத்தல் கூடாது; அவை நம்முடைய சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயப்பனவாகும். அவை, தம்மை வெளிக்காட்டாமல் குடிமக்க ளிடையே நன்னெறிகளைப் போதித்து வருகின்றன. நல்ல வழிகளைக் கடைப்பிடிக்கச்செய்து வருகின்றன என்பதை மறந்து விடுதல் கூடாது.

நகர்ப்புறத்தில் இருக்கும் அறநிலையங்களுக்குப் பெரும் பாலும் சொத்துக்களாக இருப்பவை வீடுகளும் கடைகளுமே யாகும். இடைப்பட்ட நகரங்களிலும் கிராமங்களிலும் இருப் பவற்றிற்கு நிலவருவாய் உண்டு. அதிலும் தஞ்சைமாவட்டத்தில் உள்ள கோயில்கள் பெரும்பாலும் நிலவருவாயையே நம்பி இருப்பன பத்தாண்டுக் காலமாக குடிமக்களுக்குத் துயர் துடைத்தல், கருணை காட்டல் என்ற அடிப்படையில் அரசு குடி களுக்குச்சலுகைகள் அளித்தது. அச்சலுகையைக்குடிமக்கள் அள வுக்கு மீறி கையாளத்தொடங்கியதால் அறநிலையங்களின் வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டது. அதனுல் வழிபாடு முதலிய வைகளும் தடைபடுகின்றன.

சென்ற பசலியில் நல்ல விளைவு இருந்தும் நிலவருவாயில் அறநிலையப்பங்கைக் கொடுக்காமல் இருப்பதற்குச் சாதகமாக இச்செயல்களைப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர். அறநிலை யங்களுக்கு இவை பாதகமாக அமைந்து விட்டன. இந்தநிலை ஒரு ஆண்டுக் காலம் அல்லது இரண்டு ஆண்டுக்காலமாக இருந்தால் அறநிலையங்கள் ஓரளவு தம்பணிகளைச் செயலாற்ற

முடியும். பத்தாண்டுக் காலமாகத் தொடர்ந்து நீடித்து வருவதால் அறநிலையப் பணியாளர்களுக்குப் பல மாதங்கள் சம்பளம் கொடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது நித்திய வழிபாடுகளும் காலத்தில் சரிவர நடைபெற இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாட்டுமக்கள் நன்கு அறிவர். இந்நிலை மேலும் நீடித்தால் சில மாதங்களில் முன்னவனார் பூசைகள் முட்டுப்படும். பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் பசிப்பிணியால் வாடுவர். இவற்றைச் சார்ந்த அந்தந்த வட்டார மக்களும் வாட்டமுறுவர். இந்நிலை நீங்கி தன்னிலை எய்த ஒருமாத காலத்தில் குறுவைமகசூல் வரக்கூடியதாக இருக்கும். இக்காலத்திலாவது கோயிலுக்குரிய பங்கு தடையின்றி கிடைக்கச்செய்வது இன்றியமையாதது.

அரசியல் கட்சிக்காரர்கள் நிலத்தில் இருப்பவர்களை வெளியேற்றப்படுவதாகக் கூக்குரலிடுகின்றனர். எந்த அறநிலையமும் குடிமக்களை அம்மாதிரி வெளியேற்றியதாகத் தெரியவில்லை. ஆதீனத்திருக்கோயில் நிலத்தில் குத்தகையாளர் யாரும் வெளியேற்றப்படவில்லை. எல்லா நிலங்களும் விவசாயக்குடிமக்களிடமே இருக்கின்றன. அப்படியிருக்க குடிமக்களுக்குத் தாங்கள்தான் நன்மை செய்பவர்கள் என்று சொல்லிக்கொண்டு குடிமக்களுக்கு நன்மை செய்துவரும் அறநிலையங்களைக் குறைவுபடுத்தி தவறான பிரசாரம்செய்துவருகின்றனர். சூது வாது அறியாத குடிமக்களும் தவறான பிரசாரத்தை நம்பி தாங்கள் செலுத்தவேண்டிய குத்தகை முதலியவற்றைப் பின்னர் தள்ளுபடி ஆகும்என்ற நம்பிக்கையில் செலுத்தாது இருந்து வருகின்றனர்.

குத்தகை தாரர்கள் நிலம் நன்றாக விளைந்தால்; தாம் ஒப்புக்கொண்ட குத்தகை கொடுக்கவும் நிலம் சரியாக விளையவில்லையானால் தாங்களே கோர்ட் மூலம் வாரமாகக் கொடுக்கவும் சட்டப்படி உரிமை உடையவர்களே. இவ்விதம் அந்தந்த ஆண்டும் விளைந்த அளவிற்குப் பாக்கி இல்லாமல் அளக்க சட்டமும் உரிமையும் இருந்தும் குத்தகை அளப்பதில் தள்ளுபடி எப்படியாகிலும் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் களத்து மேட்டில் அளக்காமல் - அறநிலையங்களுக்கு உரிய பங்கைச் செலுத்தாமல் ஒத்திப்போடுகின்றனர்.

அறநிலைய இலாகாவினரும் தமிழக அரசும் நடுநிலையாக நின்று அறநிலையங்களுக்குக் கிடைக்க வேண்டிய பகுதியை-வாரத்தை-குத்தகையை சட்டப்படிக்குள்ள 60×40 என்ற விகிதத்தில் களத்து மேட்டிலேயே கிடைக்கச் செய்வது இருசாரார்க்கும் நலம்பயப்பதாகும். உரிய பகுதியைக் கொடுத்துவிட்டு எடுத்துச் செல்வதில் தடையொன்றுமில்லை. எனவே இதற்கு அறநிலைய இலாகாவும் தமிழக அரசும் வழிவகை செய்து உதவுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

"லோகாஸ் சமஸ்தாஸ் சுகினோபவந்து"

# அன்னையின் அருள்

‘கடமை’ என்பது பலரால் பலவகையில் பொருள்கொள்ளப் படுகின்றது. ஆயினும், ‘பிரதிபலன் யாதொன்றையும் எதிர் பாராது செய்யப்படுவதே கடமை’ என்பதைத் திருவள்ளுவர்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு"

என்பதனால் விளக்கிப் போந்தார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்றால், தாயும், தந்தையும் மகனை ஈன்று புறந்தருதலையும், சான்றோனாக்குதலையும் அவனிடம் ஏதேனும் கைம்மாறு கருதியோ செய்கின்றனர்? இல்லை மகன் பின்பு தாய்தந்தையர்க்கு உதவலாம்; அல்லது உதவாமலும் போகலாம். அஃது அவனது பண்பாட்டினைப் பொறுத்ததே யன்றி, அந்த உதவியை எதிர் பார்த்துத் தாய் தந்தையர் செய்வதில்லை. "தமக்கென வாழாது பிறர்க்கெனவே முயலும் சான்றோரது செயல்களும் அத்தகைய கடமைகளாகத்தான் நிகழ்கின்றன’ என்பதையே மேற்குறித்த குறள் விளக்குகின்றது. இன்னும்,

"கடன் என்ப நல்லவை யெல்லாம், கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

என்னும் குறள் இதனை இன்னும் மிகத் தெளிவாக விளக்கு கின்றது.

தாய் தந்தையரது கடமையால் நலம்பெற்ற மகனும், சான்றோரது கடமையால் நலம்பெறுகின்ற உலகமும் அக் கடமையைச் செய்தவர்கட்கு - செய்கின்றவர்கட்கு நன்றியறியும் கடப்பாடு உடையர். ஆயினும், அக் கடப்பாடுகள் எல்லாம் காரணம் பற்றிச் செய்யப்படுவனவே யாதலின் முன்னர்ச்செய்த கடமைகட்கு எக்காலத்தும் ஈடாகமாட்டா. இவற்றை முன்னர்க் கூறிய கடமைகளைச் செய்தோர் எதிர் பார்ப்பதும் இல்லை என் பதை முன்பே குறிப்பிட்டோம்.

உயிர்களாகிய தாய் தந்தையர்களும், சான்றோர்களுமே இத்தகையவர் என்றால், இறைவனோ தனது கடமையைக் கைம்மாறு கருதிச் செய்யப்போகின்றான்? இல்லை! இல்லை!! அவ்வாறு ஒரு காலத்தும் இல்லை. அவனுக்குப் பிறரால் ஆகக் கடவதும் ஒன்றில்லை. மற்று, அவன் உயிர்களுக்குச் செய்வன அனைத்தும் கருணை காரணமாகக் கொண்ட கடமைகளேயாகும். ஆயினும் அனைத்து நலன்களையும் அவனுல்எய்திவரும் உயிர்கள் அவனை ஒருஞான்றும் மறவாது போற்றும் கடப்பாடுடையன. இதனையே அப்பர்பெருமான்,

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்;
என்கடன் பணி செய்து கிடப்பதே"

என அருளிச் செய்தார்.

தாய் தந்தையரும், சான்றோரும் தம் மகனுக்கும், பிறருக்கும் செய்யும் நலங்கள், அவற்றைப் பெறுகின்றவர்களுடைய தேவையில் எத்தனையில் ஒருபங்காய் இருக்கும்? எத்தனையோ ஆயிரத்தில் ஒரு பங்காய்த்தான் இருக்கமுடியும். ஏனெனில் உயிர்களின் தேவைகளுக்கோ அளவில்லை. அத்தனையையும் செய்துவிட அவர்களால் இயலுமோ! இயன்ற அளவே செய்கின்றார்கள். ஆனல், இறைவனல் செய்ய இயலாதது ஒன்றில்லாமையால், ஓர் உயிரல்ல, சில உயிரல்ல, அளவற்ற உயிர்களுக்கு அளவற்ற தேவைகளை அவன் நிரப்பிவருகிறான். ஆகையால் 'உண்மையான தாயும், தந்தையும், பிற சுற்றத்தாரும், பிறவும் எல்லாம் இறைவனே யன்றிப் பிறரில்லை' எனத் தெளிந்துரைக்கின்றனர் பெரியோர். இதை,

"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப் பாய்நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே"

என்னும் திருத்தாண்டகப் இனிது விளக்குகின்றது.

இங்ஙனம் உயிர்கட்கு எல்லாமாய் இருந்து உதவுவதில் இறைவன் அப்பனும் அம்மையுமாய் இருந்து உதவுதல் தலையானது என்பதை மேற்கண்ட திருத்தாண்டகத்திலும் அறிகின்றோம்.

அன்னை, பிதா என்னும் இருவரும் ஒரு நிலையினரே யெனினும், சில வகையில் தாய்க்குச் சிறப்புச் சொல்லப்படுவதை இயல்பாகக் காண்கின்றோம். எக்காரணம் பற்றியோ சில இடங்களில் பிள்ளைகளுக்குத் தந்தையைவிடத் தாயிடத்தும், சில இடங்களில் தாயைவிடத் தந்தையிடத்தும் அன்பு மிகுதியாக உள்ளது. இந்நிலையில் இறைவன், 'தந்தை தாயரில் வேறுபாடில்லை' என்பதை விளக்க ஒரு திருமேனியிலே அம்மையும், அப்பனுமாய்க் காட்சியளிப்பினும் அம்மையாகத் தனியேயும், அப்பனாகத் தனியேயும் காட்சி வழங்குகின்றான். மக்களில் 'அம்மையே சிறந்தவள்' என்று சிலரும், 'அப்பனே சிறந்தவன்' என்று சிலரும் தங்களுக்குள் வாதிட்டுக்கொண்டாலும், அவர்கள் இருவருக்குள் சிறிதும் வேறுபாடில்லை. எனினும், 'அப்பன் இதை அருளமாட்டான்; அம்மைதான் அருளுவாள்' என்றும் 'அம்மை இதை அருளமாட்டாள்; அப்பன்தான் அருளுவான்' என்றும் மக்கள் சிறப்பாகக்கொண்டு வழிபடுவர். அத்தகைய வழிபாட்டிற்கு எந்த நாளும், எந்த நேரமும் உரியன என்றாலும், அது ஞான நிலைக்கே. கிரியை நிலைக்கோ நாள், நேரம் முதலிய வரையறைகள் இன்றியமையாதன. அம்மை வழிபாட்டிற்குச் சிறப்பு நாட்கள் 'நவராத்திரி' எனப் பெயர் பெற்ற தினங்களாகும்.

வசந்த காலமாகிய சித்திரைத் திங்களிலும் நவராத்திரி உண்டு; அது 'வசந்த நவராத்திரி' எனப்படும். எனினும், சரத்காலமாகிய புரட்டாசி மாதத்தில் வருகின்ற நவராத்திரியே எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது.

மக்கள் விரும்பும் நலங்களில் சிறப்பானவை 'கல்வி, செல்வம், வெற்றி' என்பன. இவைகளை அளிப்பவள் அன்னையே எனப் பலரால் அன்பு செய்யப்படுகின்றாள். அவ் அன்னை கலைமகளாய் இருந்து கல்வியையும், திருமகளாய் இருந்து செல்வத்தையும் கொற்றவையாய் இருந்து வெற்றியையும் தருகின்றாள். மக்கள் பலராலும் விரும்பப்படுவது வெற்றி. ஆகவே நவராத்திரியில் முதல் மூன்று நாட்கள் வெற்றியைத்தரும் கொற்றவைக்கு உரிய நாட்களாய் விளங்கும். அடுத்த நிலையில் விரும்பப்படுவது செல்வம் எனவே, அடுத்த மூன்று நாட்கள் திருமகளுக்கு உரியனவாகும். 'கல்வியே தலையாயது' என்றாலும், அதனைப் பெறுபவர் சிலரே. மேலும் கல்வி இப்பிறப்போடு போகாமல், அடுத்த பிறப்பிலும் உடன் செல்வது. ஆகவே, நவராத்திரியில் இறுதி மூன்று நாட்கள் கலைமகளுக்கு உரியவாயின. ஒன்பது

நாளும் கொண்டாட இயலாதவர் ஒன்பதாம் நாளை மட்டும் 'மகா நவமி' என்றும், 'கலைமகள் வழிபாடு' என்றும் சொல்லித் தவறாது வழிபடுவர்.

அன்னையின் அருளைப் பெறுதற்கு இந் நவராத்திரி நாட்கள் சிறந்தன ஆதலின், திருக்கோயில்களிலும், திருமடங்களிலும் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெறும் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்கள் அனைத்திலும் இவ்விழாச் சிறப்பின் அங்கமாகச் சமயச் சொற்பொழிவுகளும பிறவும் நிகழும்

தருமை யாதீன மடாலயத்தில் இந்நாட்களிலெல்லாம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மஹாலட்சுமி துர்க்கா தேவி திருமுன்பில் சதசண்டி யக்ஞம், கோடியர்ச்சனை, முதலியவைகளை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் உடன் இருந்து சிறப்பாக நடத்துவித்து அன்னையின் அருட்பிரசாதத்தை அன்பர்கட்கு வழங்கியருளுவார்கள்.

இத்தகைய சிறப்பு நாள் அண்மையில் வருவதால், அன்னையின் அருளைப் பெற விரும்பும் அன்பர்கள் அனைவரும், ஆதீனத் திருமடம் திருக்கோயில்களிலும், பிற இடங்களிலும் சென்று வழிபடுதலோடு, தங்கள் தங்களுக்கு இயன்ற அளவில் தங்கள் இல்லங்களிலும் அம்மையை வழிபட்டு, அவளது அருளால் அனைத்து நலங்களும் பெற்று உய்வார்களாக.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthacateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

Had the unique grace of the Lord to have Dharshan of the Lord and Devi Abirami.

(Sd) P. S. Kailasam,

11—9—76 Chief Justice, Madras High Court

---

## திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு 26 ஆவது சதசண்டியக்ஞம்

நள ஆண்டு புரட்டாசித் திங்கள்

| தமிழ் தேதி | இங்கிலீஷ் தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|---|
| 7 | 23—9—76 | வியாழன் | காலை மணி 9-க்கு கணபதி ஹோமம். இரவு மணி 9-க்குமேல் 12 க்குள் ரிஷப லக்னத்தில் எஜமான அநுக்ஞை, தேவி அனுக்ஞை, விக்னேச்வர பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 8 | 24—9—76 | வெள்ளி | காலைமணி 9-க்குமேல் 9-30க்குள் கடஸ்தாபனம், சதசண்டியக்ஞ பூஜாரம்பம் |
| 12 | 28—9—76 | செவ்வாய் | இரவு ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் (தீபபூஜை) ஒன்பது குத்துவிளக்குகளில் நவதுர்க்கா ஆராதனை. |
| 13 | 29 9—76 | புதன் | மாலை வில்வாபிமந்த்ரணம் (வில்வதருவில் மகாலக்ஷ்மி பூஜை) இரவு சதசண்டியக்ஞசாலையின் முன்பு தீபபூஜை. ஒன்பது குத்துவிளக்குகளில் நவதுர்க்கா பூஜை |
| 14 | 30—9—76 | வியாழன் | காலையில் நவபத்திரிகாக்ரஹணம். (அதாவது கதளி, தாடிமம் தான்யம், ஹரித்ரா, மானி, கவி, வில்வம், ஜயந்தீ, அசோகம் என்ற தெய்விகச்செடிகளில் ஒன்பது தேவசக்திகளைப் பூஜித்து வழிபடுதல். அஷ்டாதச ஆயுத மண்டல பூஜை. |
| 15 | 1—10—76 | வெள்ளி | சரஸ்வதிபூஜை. காலை 9½ க்குமேல் 10க்குள் சோபனத்திரவிய சமர்ப்பணம். வசோர்த்தாரை, மஹாபூர்ணாஹுதிதீபாராதனை. இரவு மண்டலபூஜைபலி. |
| 16 | 2—10—76 | சனி | காலை சதசண்டியக்ஞ பூர்த்தி. மணி 10-30 க்குமேல் விருச்சிக லக்னத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு சதசண்டியக்ஞ கலச அபிஷேகம், தீபாராதனை. |

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனம் ஆவணிமூலப் பெருவிழாவில்

டாக்டர். திரு. பா. நடராஜன் M. A., Ph. D. அவர்களுக்குப்
" பொருளியல் தத்துவப் பேரறிஞர் "
என்னும் பட்டமளித்து
வழங்கி அருளிய

# ஆசியுரை

3—9—76

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்
[துறையாய்
அரிய பொருளே அவிநாசி அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி செய்வ தொன்றும் அறியேனே.

ஆவணிமூல விழா நம் தமிழ்நாட்டில் பெரும்பாலான கோயில்களில் கொண்டாடப்பெறுகிறது. ஒரு விழாச் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒரு காரணம் வேண்டும். ஆவணிமூலவிழா நரியைக் குதிரையாக்கியதும் குதிரையை நரியாக்கியதும் ஆகும். ஆனால் அதற்காக இங்கு விழா எடுப்பது இல்லை. இறைவன் பிட்டுக்காக மண் சுமந்ததை எண்ணியே இவ்விழாவை எடுக்கின்றார்கள். நரி குதிரையானதையும் குதிரை நரியானதையும் நாட்டில் நினைப்பார்யாருமில்லை. வந்தியின் அளவிலா அன்பையும் இறைவனின் அருள் திறத்தையும் வைத்து இவ்விழாவைக் கொண்டாடுகின்றோம். நரி குதிரையானதும் குதிரை நரியானதும் நல்ல செயல் இல்லை. நரி தந்திரம் (சூழ்ச்சி) உடையது. குதிரை கபடு (வஞ்சகம்) உடையது. நம் நாட்டில் எல்லாக்

கோயில்களிலும் ஆவணிமூல விழாக் கொண்டாடிஞலும் மதுரையிலும் தருமையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் ஆவணிமூலந்தோறும் ஒவ்வொரு புலவரைப் பாராட்டிப் பட்டம் வழங்கவேண்டும் என்று கயிலைக் குருமணி அவர்கள் திருவுளம் பற்றினர்கள். அதன்படி பா. நடராசன் அவர்கள், பட்டம் பெறுவோர் வரிசையில் 26 ஆவதாகப் "பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற பட்டத்தை இன்று பெற்றிருக்கின்ருர். இருபத்தாருவது பட்டத்தை, இருபத்தாருவது மகாசந்நிதானம் வழங்குவதும் எழுபத்தாருவது ஆண்டில் பெறுவதும் திருவருட் பொருத்தமாகவே அமைந்துள்ளது. பேரறிஞர் என்பதை டாக்டர் என்பதற்கு மொழிபெயர்ப்பாகச் சொல்கின்ருர்கள். பொருளாதாரத்தில் இவர் பேரறிஞர், மெய்ப் பொருளிலும் இவர் பேரறிஞர். மெய்ப் பொருள் நிலையானது. அது பதி, பசு, பாசம் என்பதாகும். கடவுள், உயிர், உலகம் என்பன என்றும் உள்ள பொருள்களாகும். பொய்ப்பொருள் நிலை மாறுதலுடையது. நிலையானதிலும் பேரறிஞர்; நிலை மாறுபாடுடையதிலும் பேரறிஞர். நாம் சென்னையில் இருக்கும்பொழுது ஒருமுறை சிவஞானபோத விழாவிலே இவரைப்பேசச் சொன்னேம். 15 நிமிடத்தில் 12 சூத்திரங்களை மிகத் தெளிவாகச் சொன்னர். இவ்வளவு தெளிவாகச் சொல்கின்ருரே என்று கேட்டோர் வியந்தனர்.

" பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளாஞம் மாணுப் பிறப்பு " — குறள்

பொருளென ஒன்று போல் காட்டி மயக்கும் திறன்படைத்தது எதுவோ அதுதான் பொய்ப்பொருள். அப் பொருளின் மயக்கம் இருக்கும்வரை நமக்குப் பிறவிவரும் என்பது திருக்குறட் கருத்தாகும். இது உலகியற்பொருள்பற்றியவிளக்கமாகும். பொருள் என்ற சொல்லுக்கே இறைவன் என்பதுதான் உண்மையான பொருள் என்பதையும் ஒருகுறளால் குறிப்பிடுகின்ருர்.

மனிதனைப்புகழ்வதெல்லாம்உபசாரம்; இறைவனைப்புகழ்வதே உண்மையானது; அதாவது பொருளுடையது என்கிருர். பொருளுடைய புகழ் என்ற கருத்தை,

" இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன் பொருள்சேர்
புகழ் புரிந்தார் மாட்டு " — குறள்

எனவே பொய்ப்பொருளாக - நிலைமாறுபாடுடையதாக உள்ளவை உலகியற்பொருள்கள்; ஆனால் என்றும் நிலைபேறுடைய தாக உள்ள இறைவனை அடைய உதவியாக இருப்பவை. இவ் வுண்மையை ஆய்ந்து அறிவோர் நன்கு உணர்வர்.

நிலையில்லாதது பொருளியல்; அதைக்கொண்டுதான் அனைவரும் உண்மை உணர்ந்து உயரமுடியும். இதற்காகவே இறைவன் இந்த உலகியலைப் படைத்திருக்கின்றான். உலகியலை உணர்வது பொய்ப் பொருளை உணர்வதாம். அதன் வழியே மெய்ப்பொருளை உணர வேண்டும் என்ற கருத்து வழி வழியாக வருவதால் மரபிற்கும் ஒத்து வருவதே; எனவேதான் உலகியற் பொருளாதாரத் தத்துவத்திலும் மெய்ப்பொருளியல் தத்துவத்துறையிலும் திறமை மிக்க இவருக்குப் "பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற பட்டம் வழங்கப் பெற்றிருக் கின்றது.

இவர் திருமந்திரத்திற்குக் குமரகுருபரனில் விளக்கவுரை எழுதியுள்ளார். இப்பொழுது சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திவருகின்ற "சைவசித்தாந்தா" என்ற ஆங்கிலப் பத்திரி கையில் திருமந்திரத்திற்கு ஆங்கில மொழிப் பெயர்ப்பை எழுதி வருகின்றார். இவரை நம் தமிழ்நாடு, இந்தியா பட்டுமின்றி வெளிநாட்டு அரசும் கூடப் பாராட்டுகிறது. இவருக்கு அளித் துள்ள பட்டம் பொருளியல் அறிஞர் எனவும் தத்துவ அறிஞர் எனவும் இருவகையில் பொருந்தக் கூறுமாறு அமைந்துள்ளது.

இவர் திருமடங்களோடுமிக்கதொடர்புடையவர். இவருடைய குடும்பத்தார் நாகர்கோயிலைச் சார்ந்த சுசீந்திரத்தில் உள்ளனர். அங்கு நம் சிஷ்ய மடமாகிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்திற்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. அந்நிலங்களைக்குத்தகைக்குப் பெற்றுக்கண்காணித்துவருகின்றனர். அக்குத்தகையையும் நல்ல முறையில் கொடுத்து நட்புறவை வளர்த்துவருகின்றனர். இவர்க ளுடைய நடைமுறையை நிலங்களைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் அனைவரும் மேற்கொண்டால் நாட்டுக்கும், அரசுக்கும், அறநிலை யங்களுக்கும் எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது நாடும் செழிப்புறும்; அறநிலையங்களும் நன்முறையில் செயல்படும்.

இவருடைய தம்பியின் பெயர் சொக்கலிங்கம் என்பதாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபராக சொக்கலிங்கத் தம்பிரான் என்பவர் பெரும் புலமை மிக்கவராக விளங்கிவந்தார். இவர்களிடம் தமிழ்ப் பாடம்

கேட்டவர் பலராவர். இவர்களிடம் பக்திபூண்ட, நடராஜன் அவர்களின் தந்தையார் குத்தகைகொடுத்து ஆதரித்த நன்றியுணர்வைப் போற்றி தன் பிள்ளைகளில் ஒருவருக்குச் சொக்கலிங்கம் என்று பெயர்வைத்து மகிழ்ந்தார். இத்தகைய நல்லொழுக்கமும், நற்செயலும் அறநெறிப் பற்றும் கொண்டுள்ள ஒரு குடும்பத்தைச் சார்ந்தவருக்கு – ஆதீன சிஷ்ய மடத்துக் குடிமகன் ஒருவருக்குப் "பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்றபட்டம் கொடுக்கப்படுகிறது இது எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.

இங்குக் குருஞானசம்பந்தர் திருப்பெயராலே தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப்பள்ளியும், வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலைகளும், பல்கலைக் கல்லூரியும் இருக்கின்றன. இவற்றில் கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு ஏற்ப இவர் அறிவுரை கூறுவார்.

தமிழ்க் கல்லூரிகளில் புலவர் வகுப்புக்களை இப்பொழுது பி. லிட் பட்டப்படிப்பாக மாற்றியிருக்கிறார்கள். இந்தப் பட்டப் படிப்பைப் பற்றி அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதனை, சென்னைப் பல்கலைக் கழகமும் அனுமதித்துள்ளது.

தமிழாசிரியர்கள் புலவர் பட்டத்தை (டிப்ளமா) பி. லிட் என்று டிகிரி ஆக்கித் தாங்கள் பெருமைபெற வேண்டுமென்று கருதினார்களே தவிர, தமிழ் பயில்கிறவர்கள் தற்போது பெறுகின்ற தமிழிலே உள்ள புலவர் என்ற (டிப்ளமா) பட்டத்தையே டிகிரி ஆக்காது விட்டனர் காரணம் பல்கலைக்கழகச் சட்டம் அதற்கு இடம்தரவில்லையென்கின்றனர். அச்சட்டத்தையும் மாற்றியிருப்பார்களாயின் தமிழுக்கும் பெருமை தேடியவர்களாவார்கள். பி. லிட் என்ற பட்டம் பெறுவோர் எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் விதியாகும். புகுமுக வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் பி லிட் பட்டம் பெற இயலாது. கல்லூரி மூலமாகப் புலவர் பட்டமும் (டிப்ளமா) பெற இனிஇயலாது போய்விடும். புகுமுகவழித்தேர்வு எழுதுகின்றவர்களும் பயன்பெற வசதியிருப்பின் நலமாகும். திரு. கா. நமசிவாய முதலியார் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான்வகுப்பை ஏற்படுத்தப்பெருமுயற்சி செய்தார்கள். பல்கலைக் கழகமும் அவர் வேண்டுகோளைஏற்று, "வித்துவான்" என்றபட்டத்தைக்கொடுக்க இசைவு தந்தது. அவர்கள் சொல்லியது நடைமுறைக்கும் வாழ்வியல் நெறிமுறைக்கும் ஒத்ததாக அமைந்தது. அவர்கள் செல்லியதை நாட்டுமக்கள் நன்றி உணர்வுடன் ஏற்று நடந்து வந்தனர். பின்னர் வித்துவான் என்ற பட்டத்தை தமிழில் புலவர்

என்று மாற்றினர். இவ் ஏற்பாடு தமிழ் பயில விரும்புவோர் அனைவர்க்கும் நன்மையளிப்பதாக இருந்துவந்தது. திரு. நமசிவாய முதலியார் போன்ற உயர்ந்தவர்கள் முன்பு கருதியதை இன்றுள்ளோர் மறந்து விட்டனர். 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்று தொல்காப்பியர் கூறினர். ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோரே உயர்ந்தவராவர். அவர்கள் சொல்வதை நாம் ஏற்கவேண்டும். இப்பொழுது, பலர் கூடி பல்கலைக் கழகத்தில் பி. லிட். என்ற பட்டப் படிப்பை கொண்டு வந்திருக்கின்றனர். நாமும் நன்மைபெற தமிழும் பெருமைபெற நாம் முயலவேண்டும். பி. லிட் என்ற பட்டப்படிப்பால் வருகின்ற பெருமையையெல்லாம் புலவர் என்ற டைட்டில் வாயிலாக அடைய முயற்சி செய்திருந்தால் திரு. நமசிவாய முதலியார்போன்றோரின் உள்ளம் பெருமிதம் அடையும். தற்பொழுது புலவர் என்ற டைட்டலே மறையும் நிலைமையை உருவாக்கி விட்டார்கள். இப்போதைய தமிழ்ப்புலவர்கள்பட்டப்படிப்புப் (டிகிரி)பெறவசதியாக தமிழில் எம்.ஏ. போன்ற பட்டப்படிப்பிற்குப் பல்கலைக்கழகம் வழிசெய்திருக்கிறது. ஆதலால் பி. லிட் என்ற பட்டப் படிப்பின் மூலந்தான் உயர்வுபெறவேண்டும் என்பது இல்லை. புலவர் பட்டம் பி. லிட். டிகிரியாக மாற்றப்பட்டது பற்றி நாம் சிந்தித்த கருத்துக்களைப் புலவர்களும் சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே இங்குக் குறிப்பிட்டோம். சிந்தித்துச் செயல்படுவார்களாக.

மாணவ மாணவியர்களும், இளைஞர்சமுதாயமும் உலகம் ஓடுகிற போக்கில் ஓடாமல் நன்குகச் சிந்தித்துப் பெரியவர்களின் சொற்களில் நம்பிக்கைவைத்து அதனைக் கேட்டு நன்கு வாழச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

கடிதம்

**P. N. SHARMA,** Suchindrum.
Regd. Medical Practitioner.

இவ்வாண்டு ஆவணிமூல விழாவில் பட்டம் பெறும் டாக்டர் பா. நடராசன் எனது நண்பர் மட்டுமல்ல, நாங்கள் இருவரும் அடுத்தடுத்து உட்கார்ந்து ஆறு வருடம் பள்ளியில் படித்தோம். அவருக்கு ஆதீன மடத்திலிருந்து கிடைத்த வெகுமதிக்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

நீலகண்ட சர்மா.

## " பொருளியல் தத்துவப் பேரறிஞர் "

என்ற பட்டம் பெற்ற

### டாக்டர். திரு. பா. நடராஜன் M. A., Ph. D., அவர்கள்

# ஆற்றிய உரையின் சுருக்கம்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிக் கமலங்களை முதற்கண் வணங்குகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இன்று இங்கு எனக்கு ஒரு பட்டம் கொடுத்தருளினர்கள். " பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற பெரியபட்டத்தை எனக்கு அளித்துள்ளார்கள்; மிகவும் பெருமைக்குரியது இப்பட்டம். எனக்குப் பல பல்கலைக் கழகங்களிலிருந்தும் அமெரிக்கா, ஜெர்மனி முதலிய வெளிநாடு களிலிருந்தும் பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அதை எல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. இந்தப் பட்டமளிப்புவிழா என்னுடைய மனதில் நன்கு பதிந்துவிட்டது. இது சிவஞானப் பல்கலைக் கழகம். இங்குக் கொடுக்கப்பெறும் இந்தப் பட்டத்தை நான் பெறுவது முன்வினைப்பயன்தானேதவிர வேறில்லை. இந்த ஆவணி மூலத் திருநாளில் எனக்குத் திருவருள் வாய்ப்பால் இப்பட்டம் கிடைத்தது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும்.

நரியைப் பரியாக்கியதும் பிறகு பரியை நரியாக்கியதும் அரசியலில் பார்க்கின்றோம். ஆதலின் அச்செயலை விட்டுவிட்டு இனிமையான பிட்டு சம்பந்தப்பட்ட செயலை விழாவின் குறிக் கோளாகக் கருதிக் கொண்டாடி மகிழ்கின்றோம். இவ்விழா உழைப்பின் சிறப்பைத் தெரிவிக்கின்றது. நாம் நன்கு உழைத் தால் நமக்கு இறைவன் பிட்டு தருவான். பிட்டு விழா உணவுப் பண்டங்களைப் பலரோடு பிட்டுப் பகிர்ந்துண்ணும் சமத்துவ வாழ்வைத் தெரிவிக்கிறது. பொருளாதாரத் துறையிலும் பிட்டு விழா தேவைதான்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நான் சென்னையில் சிவஞானபோத விழாவில் 15 நிமிடத்தில் 12 சூத்திரங்களைப் பேசினேன் என்று கூறியருளினர்கள். சிலபேருக்குச் சிலசமயம் ஆவேசம் வரும். அது அவர்களின் செயல் இல்லை. இறைவன் உள்ளேயிருந்து ஆட்டுவிக்க அங்ஙனம் ஆடுகிறார்களே தவிர அவர்கள் செயல் என்று அதனைக் கருதமுடியாது. அதுபோன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் சென்னையில் அன்று என்னுள்ளே இருந்து சொல்லச் சொல்லியதால்தான் அங்ஙனம் பேசினேன். இப்பொழுது என்னைப்பேசச்சொன்னால் அப்படிப்பேசமுடியாது.

சைவம் என்பது சிவம் சம்பந்தப்பட்டது. சிவம் என்றால் அன்பு என்று பொருள். கடவுள் நம்மீது உள்ள அன்பினால் நம்மைப் படைக்கின்றார். அன்பினாலேதான் அழிக்கின்றார். இந்த ஆன்மாவானது கர்மவினைக்கு ஒப்ப இருந்து நல்ல நிலையை அடைவதையே சைவ சித்தாந்தம் கூறுகிறது.


"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்பர் திருமூலர்.

நம்சமயம்போல் உலகில் வேறு எந்தச்சமயமுமில்லை. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார்வள்ளலார். எந்தச் சமயமும் இந்த மாதிரி கூறவில்லை. அப்படிப்பட்ட சமயத்திற்குத் தலைவராக இருந்து நம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நம்மையெல்லாம் குழந்தைகளாகப் பாவித்து அருள் பாலிக்கின்றார்கள்.

பொருளை மெய்ப்பொருள் என்றும் பொய்ப்பொருள் என்றும் பிரித்து வழங்குவர். பதி, பசு, பாசம் இது மெய்ப்பொருள். அறத்தான் வருவதே பொய்ப்பொருளாகிய செல்வத்திற்குச் சிறப்பு எனலாம். திருவள்ளுவர்கூட அறம் என்பதை முதலில் கூறியே பின் பொருளைக் கூறுகின்றார். 'பொருளாதாரத் தந்தை' என்று பாராட்டப்பெற்ற அவரே ஒழுக்க நூலிற்கும் பேராசிரியராக இருந்தவர் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

பொதுவாகப் பட்டம் வாங்குகிறவர்கள் எங்கும் பேசுதற்கு இயலா நிலையில் இருப்பார்கள். இங்கு நான் நன்றிகூற வாய்ப்புக் கொடுத்தமையை நினைந்து நினைந்து இன்புறுகின்றேன். சமய வழியான நம் மரபு வாழையடி வாழையாக வேரூன்றினால்தான் சைவம் மேலோங்கும். நமக்கு ஒரு லட்சியம் வேண்டுமானால் சமயப் படிப்பு வேண்டும். ஆதலின் நாம் நம் சைவ சமயத்தை வழிவழியாகக் காப்பாற்றுவோம் என்றுகூறிச் சைவமும் தமிழும் வாழ ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு மீண்டும் நன்றிகூறி வணங்குகின்றேன்.



சந்தானசாரியருள் இரண்டாமவராகிய

## ஸ்ரீ அருணந்திதேவர்


# குருபூஜைத் திருநாள்

22—9—1976 புதன்கிழமை

---

குறிப்பு :— பண்ணுருட்டிக்கு அருகில் உள்ள திருத்துறையூரில் ஸ்ரீ அருணந்திதேவர் குருமூர்த்த ஆலயத்திலும், ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் ஆலயத்திலும், தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். சிதம்பரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் தில்லைத் தமிழ்மன்றத்தின் சார்பிலும் தருமையாதீனத்திலும் விரிவுரைகள் நிகழும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாருவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பூம்புகார், 'கண்ணகிபத்தினிக் கோட்ட'த்திற்கு எழுந்தருளியபோது



மேலையூர் — தாசில்பண்ணை
திரு. இரா. இராசசேகரன் B. SC., B. L., அவர்கட்கு
"செந்தமிழ்ப்பரவலர்" என்னும் பட்டம் வழங்கிப்
பொன்னுடை போர்த்தி ஆசியருளல்
7—8—1976

# 'ஹிந்து'க்கோயில்களும் நிலச்சொத்தும்

'ஹிந்துக் கோயில்களால் சமுதாயத்துக்கு நன்மை எதுவும்' இல்லை யென்றும், "ஆகையால் இயற்கைச் செல்வமான விளை நிலங்கள் மீது கோயில்களுக்குச் சொத்துரிமை இருக்கக்கூடாது" என்றும் கருதுபவர்கள் இருக்கலாம். நாம் இன்று பேசுவது அவர்களைப்பற்றியல்ல. அவர்களிடம் 'மன்னிப்பு' கேட்டுக் கொண்டு "ஹிந்துக்கோயில்கள் அவசியமே அவற்றில் நடை பெறும் வழிபாடுகளுக்காக ஒரு நிரந்தர வருவாய் இருப்பதும் அவசியமே" என்று கருதுவோரின் நிலையைப்பற்றி மட்டுமே நாம் குறிப்பிடுகிறோம்! இப்போது பேசுவது முழுதும் ஹிந்துக் கோயில்களைப்பற்றித்தான்.

திருக்கோயில்கள், திருமடாலயங்கள் பலவற்றுக்கு நிலச் சொத்துக்கள் இருக்கின்றன. இந்த சொத்துக்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு, அவற்றைச் சாகுபடியாளருக்குச் சொந்த மாக்கி, கோயில்களுக்குச் சர்க்காரே மானியம் கொடுத்துவிடலாம் என்று இடையிடையே ஒரு பேச்சு கிளம்புகிறது. இது பற்றிய கவலைகளை விவரிக்கும் ஒரு கட்டுரை சில தினங்களுக்கு முன் (புதன்கிழமை) 'தினமணியில்' பிரசுரிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக நமது கருத்தை இரண்டே வாக்கியங் களில் சொல்லிவிட முடியும். (1) 1966 க்கு முன்னர் இருந்தது போன்ற வருமானம் இனியும் சாசுவதமாக நீடிக்க வேண்டும். இதற்குச் சர்க்கார் பொறுப்பேற்கவேண்டும். (2) மானியமானது ரொக்க மான்யமாக இல்லாமல் தானியமாகத் தரப்படவேண்டும் இதுதான் நாம் சொல்ல விரும்புவது. ஆனால் இப்படி இரண்டே வாக்கியத்தில் சொன்னால் ஏதோ "மொட்டையாக" சொன்னது போல அமையும். ஆகையால் கருத்தைச் சிறிது விரிவான பாணியில் சொல்லுகிறோம்.

கோயில்களின் மூர்த்திகளுக்கு அமுது படைத்து (நைவேத் தியம் செய்து) பல சிப்பந்திகளுக்கு ஊதியமாகக் கொடுப்பது வழக்கம். இதில் எவ்வளவு தானியம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதற்குப் பல ஆண்டுகளாக, "திட்டங்கள்" இருக்கின்றன. இவ்வாறு மூர்த்திகளுக்கு அமுது படையல்தவிர, "அன்னம் பாலிப்பும்" உண்டு. எடுத்துக்கொண்ட நிலத்துக்கு ஈடாகச் சர்க்கார் ரொக்கமாகக் கொடுத்தால், கிடைக்கக் கூடிய தானியத்தின் 'அளவு' அவ்வப்போதைய விலைவாசியைப்

பொறுத்ததாக ஆகிவிடக்கூடும். உதாரணமாக இந்த ஆண்டில் ரூ. 100 க்கு ஒரு குவிண்டால் நெல்வாங்க முடியும் என்று வைத்துக்கொள்வோம். உழவுத் தொழிலாளர் 'குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்" ரசாயன உரம் முதலியவற்றின் விலை உயர்வு போன்றவை நிமித்தமாக நெல்விலை உயருவது திண்ணம். அவ்வாறு உயரும்போது இந்த ஆண்டில் ஒரு குவிண்டால் கிடைத்தது அடுத்த ஆண்டில் 80 கிலோ, அதற்கடுத்த ஆண்டில் 70கிலோ, அதற்கடுத்த ஆண்டில் 60கிலோ என்றுகுறையக்கூடும். இது "கோயில்களைப் பட்டினி போடுவதாகவே" ஆகும். ஆகையால் (1) கோயில்களுக்குக் கிடைப்பது இதுவரையில் எதிர் பார்க்கப்பட்ட அளவுக்குக்குறையலாகாது. (2) நிலத்தின் நிமித்தமாகக் கிடைப்பது தானியமாகவே கோயில்களுக்குக் கிடைக்கவேண்டும்.

* * * *

கோயில்களுக்கு வசூலாக வேண்டிய நெல் சரியாக வசூலாவதில்லை. சர்க்காரே நிலத்தை எடுத்துக்கொண்டு மானியமாகக் கொடுத்துவிட்டால்கோயில்களுக்குத்தொந்தரவு குறையக்கூடும்" என்ற ஒரு காரணம் (சமாதானம்) சொல்லப்படுகிறது. ஏன் வசூலாவதில்லை? ஒவ்வொரு ஆண்டும் ஏதேனும் ஒரு காரணத்தால் "வார வஜா" அல்லது "ஒத்திப்போடல்" அளிக்கப்படுவதால் வாரத்தைக் கொடுக்கக்கூடியவர்கள்கூட கொடுக்காமல் தட்டிக்கழிக்க முயன்றுர்கள். 'கடன், வஜா சட்டங்களில் பாங்குகளுக்கு வரவேண்டிய பணத்துக்கு விதிவிலக்குச் சலுகையளிப்பதுபோல, "மேல்வார" விஷயங்கள் கோயில்களுக்குச் சலுகையளித்திருக்கவேண்டும். (கோயில் நில சாகுபடியாளருக்குக் குறைந்தவட்டி – நீண்ட தவணையில் கடன் கொடுத்து சர்க்கார் உதவலாம். அவ்வாறு செய்யாததுதான் கோயில்களின் வாரவசூல் பாதிக்கப்படுவதற்குக் காரணம். எந்தக் கடன் நிவாரண ஏற்பாட்டிலும் பாங்குகளுக்கு இருப்பது போன்ற சலுகை பொது ஸ்தாபனங்களுக்கு இருப்பது அவசியம். இதில் சர்க்கார்செய்த தவறுகளின் விளைவை ஒரு காரணமாகச்சொல்லி கோயில்களின் நில உடைமையைப் பாதிப்பது நியாயமாகாது. அவ்வாறு "உடைமை" பாதிக்கப்பட்டால், சாகுபடிச் சட்டத்தின்படியுள்ள "சாதாரண மகசூலில் 40சதவிகிதத்துக்கு" சமமான தானியம் கோயில்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் கோயில் நிலங்களை உழவர் கூட்டுறவு சங்கங்களிடமே சாகுபடிக்கு விடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. "வார பாக்கி" ஏற்பட்டது.

அப்போது சில கோயில்களின் நிர்வாக அதிகாரிகள் திறமையுடன் அந்த நிலங்களைப் "பண்ணை சாகுபடிக்கு" கொண்டுவந்து கோயில்களின் வருமானத்தையும் நாட்டில் உற்பத்தியையும் பெருக்கியதுண்டு. அதேபோன்று கோயில்களுக்கு பண்ணை சாகுபடி வசதிகள் ஏற்படுத்தவேண்டும். எப்படியும் கோயில்களின் நில உடைமையை நீக்குவது அவசியம் என்று கருதப்படுமாயின் அதுபற்றி மூந்தின பாராக்களில் குறிப்பிட்டுள்ள கொள்கைப்படியே காரியம் செய்யப்படவேண்டும்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் சாகுபடியாளர் நில உடைமை சம்பந்தமாக ஒருசட்டம் இயற்றப்பட்டபோது, அதன் சில ஷரத்துக்கள் (கோயில்களைப் பாதிக்கும் ஷரத்துக்கள்) மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற கருத்துடன் ராஷ்டிரபதி அங்கீகாரம் மறுக்கப்பட்டதுண்டு. ராஷ்டிரபதி அவ்வாறு செய்தது முற்றிலும் நியாயமான காரியமாகும். அந்தக்கொள்கை கைவிடப்படலாகாது. முன்னர் உத்தேசித்த சட்டம் 12 ஆண்டுகளில் கோயில்களை மூடும் நிலைமையை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்திற்கு இடமளித்தது. இப்போதைய யோசனை உடனடியாகவே, கோயில்களை ஓரளவு சிரமத்துக்கு உட்படுத்துவதாக அமைந்துவிடலாகாது.

"நிலச் சீர்திருத்தத்தின்" ஒரு அம்சமாக கோயில்களின் "உடைமை" நீக்கப்படுமானால் கோயில்களின் வருமானம், தானிய வருமானம் பாதுகாக்கப்படவேண்டும்; அதாவது சர்க்கார் கொடுக்கும் "மானியம்" தானியமாகத் தரப்படவேண்டும். எப்படியும் இன்னும் பல ஆண்டுகளுக்கு சர்க்காரின் தானியக் கொள்முதல் நீடிக்கத்தான்செய்யும். ஆகையால் சர்க்கார் "எங்கிருந்து" நெல் கொடுக்கமுடியும் என்றகேள்விக்கு இடமில்லை.

ஏற்கனவே சொன்னதையே மீண்டும் சொல்லுகிறோம். கோயில் நிலங்கள் பற்றி ஏதேனும் செய்வதாக சர்க்காரிடம் பிரேரணைகள் இருந்தால் மேலே சொன்ன கொள்கைகள் கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்க ஹிந்துக்களுக்கு உரிமையுண்டு.

நன்றி· —*தினமணி*, 4—9—76.

# கடமையைச் செய்வோம்

"கடமையைச் செய், பலனில் பற்றுவையாதே என்கிறுர் பகவத்கீதையில்,

"கர்மண் யேவ அதிகாரஸ்தே
மாபலேஷ் கதாசன"

இதன் கருத்தை வலியுறுத்துவது போல சங்க காலப் புலவர் பொன்முடியார் பாடியிருக்கும் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழலாம்.

தாய்மார்களின் கடமை மக்களைப் பெற்று வளர்ப்பது; அவர்களைச் சான்றோர்களாக்குதல் தந்தையரின் கடமை. போருக்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொடுப்பது கொல்லரது கடமை. மக்களை நல்வழியில் இயங்கச் செய்தல் வேந்தனது கடமை. போரில் வெற்றிபெறுதல் காளையர்க்குக் கடமையென்று அவரவரது கடமைகள் இவை என்பதைப் பாடல்மூலம் விளக்கியிருக்கிறுர் பொன்முடியார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றேனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சைவசமய ஆசாரியர்களில் ஒருவராகிய அப்பர் சுவாமிகளும்,

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்கிறுர். இவற்ருல் அவரவரும் தம்தம் கடமையைச் சரிவரச் செய்துவந்தால் பயன் தாமாகக் கிடைக்கும் என்பது புலப்படுத்தப்படுகிறது. தொழிலாளி கடமை முதலாளிக்கு உரிமையாவதையும் முதலாளி கடமை தொழிலாளிக்கு உரிமையாவதையும் காண்கின்ருேம். எனவே, சமயப் பெரியோர்களும் இலக்கிய மேதைகளும் உரிமைக்குரலை எழுப்பாமலே கடமைகளை வற்புறுத்தியே அவரவர் உரிமைபெற வழிவகுத்துள்ளனர்.

இவற்றை மனத்தில் கொண்டுதான்போலும் நமது இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் நாட்டு மக்களுக்குப் பத்து வகையான அடிப்படைக் கடமைகளை வற்புறுத்தியுள்ளார்கள்.

1. அரசியல் சாசனத்தின் குறிக்கோள்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தேசியக்கொடிக்கும், தேசியப் பாடலுக்கும் மதிப்பு அளிப்பது.

2. நமது தேசிய விடுதலை இயக்கத்தின்போது மக்களை ஊக்குவித்த லட்சியங்களைப் போற்றி வளர்ப்பது

3. இந்தியாவின் சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாடு மூன்றையும் முழுமூச்சுடன் காப்பது.

4. வெளிநாடுகளிலிருந்து வரும் ஆபத்துக்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது; அழைப்பு வரும்போது தேசிய சேவையில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வது.

5. சமய, மொழி, மாநில, வட்டார வேற்றுமைகளின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களிடையேயும் சகோதர உணர்ச்சியையும் நேசப் பான்மையும் தூண்டுவது; பெண்ணினத்தின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் எல்லாப் பழக்க வழக்கங்களையும் கைவிடுவது.

6. தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் நமது பொதுக் கலாசாரத்தைக் குறித்துப் பெருமைப்படுவதோடு, அதைப் பின்பற்ற முயல்வது.

7. காடுகளும் வனவிலங்குகளும் அழியாமலும், ஏரிகளும் நதிகளும் கெடாமலும் காப்பது; எல்லா உயிரினங்களிடமும் இரக்கம் காட்டுவது.

8. விஞ்ஞானம், மனிதாபிமானம், சீர்திருத்தம், ஆராய்ச்சி முதலியவற்றில் நாட்டமும் ஈடுபாடும் கொள்வது.

9. பொதுச் சொத்தைக் காப்பாற்றுவது; வன்முறையைத் தவிர்ப்பது.

10. தேசம் எல்லாத் துறைகளிலும் மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயர் நோக்கத்துடன், தனிப்பட்ட முறையிலும் சமூக மட்டத்திலும் உன்னத சாதனைகள் புரிவதைக் குறிக்கோளாகக் கொள்வது.

இப்பத்து வகையான கடமைகளைப் பின்பற்றி சுதந்திர மனிதனாக கடமையிலேயே உரிமை பெற்று வாழ்வோமாக.

உ

# ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்க்குச் சிறப்புப் பரிசுகள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ந்த மாணவர் ஒருவருக்கு ஆண்டுதோறும் பொற்பதக்கம் பரிசாக வழங்கி யருள்கின்றார்கள். மேலும் நான்கு ஆண்டுகளிலும் முதல் மூன்று தகுதி பெறும் மாணவர்களுக்குப் புத்தகங்களையும் சித்தாந்தம் பயில்கின்ற நான்கு வகுப்பு மாணவர்களுக்கும் 555 ரூபாய் ரொக்கப் பரிசுகளையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருள்கின்றார்கள்.

பொற் பதக்கத்தை மாணவி செல்வி கு. கலாவதியும் சைவ சித்தாந்த வகுப்புக்களில் பயின்று தேர்ந்த மாணவர்கட்கு அளிக்கப்பெறும் ரொக்கப் பரிசுகளை நான்காம் ஆண்டில் கு. சத்தியபாமா ரூ. 100, இரெ. நடராசசுந்தரம் ரூ. 75, கு. கலாவதி ரூ. 50, மூன்றும் ஆண்டில் கி. பிள்ளார்செட்டி ரூ. 75, சு. வசந்தா ரூ 50, வெ. மஞ்சுளா ரூ. 25, இரண்டாம் ஆண்டில் தி. விஜயலக்ஷ்மி ரூ. 50, க. வெள்ளிநாயகி ரூ. 25, இரா. விஜயாள் ரூ 15, முதலாண்டில் ப. சிவப்பிரகாசம் ரூ. 50, தி. உமாராணி ரூ. 25, மு. முருகன் ரூ 15-ம் பெற்றனர்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பல்கலைக்கல்லூரியின் வெள்ளிவிழா நினைவாக நிறுவியருளிய அறக்கட்டளைக் கட்டுரைப் போட்டியில் திருவாரூர் நான்மணிமாலை பற்றி எழுதிப் பரிசு பெற்றோர் கே. சி. பிரபாகரமூர்த்தி வெ. மஞ்சுளா ஆகியோராவார்.

மாயூரம் முன்னாள் கோட்டாட்சியாளர் திரு. இரா. வீரராஜு அவர்கள் அளித்த ரொக்கப் பரிசுகளை கு. கலாவதி ரூ. 150, கே. கோசகன் ரூ 100 பெற்றனர்.

நெல்லை தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தினர் அனைத்துக் கல்லூரிகளுக்கும் நடத்திய தேர்வில் கலந்துகொண்டு முதற் பரிசு பெற்ற மாணவி செல்வி கு. சத்தியபாமா ரூ. 50 ரொக்கப் பரிசு பெற்றார்.

# திருஎதிர்கொள்பாடி - திருமணஞ்சேரித் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.**

திருஎதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி ஆகிய இவ்விரு தலங்களும் சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 24, 25 ஆவது தலங்களாக எண்ணப்படுவனவாகும். இத்தலங்கள் மாயூரத்திற்கு அருகிலுள்ள குத்தாலத்திலிருந்து வடக்கே 3 கல் தொலைவில் உள்ளன.

உமையம்மை, திருத்துருத்தி என்னும் குத்தாலத்தில் பரத முனிவரின் மகளாக அவதரித்து இறைவனைமணந்த வரலாற்றுத் தொடர்புடைய தலங்கள் இவ்விரு தலங்களையும் சூழ உள்ளன. அவற்றுள் எதிர்கொள்பாடி திருமணத்திற்காக எழுந்தருளிய இறைவனைப் பரதமுனிவர் எதிர்கொண்டழைத்த இடமாகும். திருமணஞ்சேரி திருமணம் நிகழ்ந்த தலமாகும்.

## திருஎதிர்கொள்பாடி

இது திருமணஞ்சேரிக்கு மேற்கே 1 கல் தூரத்தில்விளங்கும் தலம். இக்காலம் மேலைத் திருமணஞ்சேரி எனவழங்கப் பெறுகின்றது.

மணவாளக் கோலத்துடன் வந்த இறைவனைப் பரதமுனிவர் எதிர்கொண்டழைத் தகாரணத்தினால் இத்தலம் எதிர்கொள்பாடி எனப்படுகிறது.

சிவபெருமான் உமையம்மையாரோடு தேரழுந்தூரில் தோன்றி வேதங்களை அருளிச்செய்து வேதபுரீசுவரராக விளங்கினார். ஒருநாள் திருமாலை நடுவராகவைத்து இறைவனும் இறைவியும் சொக்கட்டான் விளையாடினர். சக்தி வென்றாள். இறைவன் அம்மையைப் பசுவாகுமாறு சபித்தனன். தேவி தன்னைத் தடுத்தாட்கொள்ளுமாறு இறைவனை வேண்டினாள். பெருமான் திருவாவடுதுறையில் அவ்வாறு ஆட்கொள்ளுவதாகக் கூறி மறைந்தார். இறைவி பசுவானாள். திருமால் மாடுமேய்க்கும் இடையரானார். (தேரழுந்தூரில் திருமால் பெயர் ஆமருவிப் பெருமான் என்பதாகும்.)

பசுவான தேவி காடுகளில் மேய்ந்து திரிந்தாள். அப்போது ஒரு புற்றின்மீது காலடிக் குளம்புபட்டது. உள்ளே சிவலிங்க உருவாயிருந்த இறைவன் காளை உருவோடு வெளிப்பட்டனன். திருவாவடுதுறையில் பார்வதி தேவியார் பசு உரு நீங்கித் தன்னுருப் பெற்ருர். தேவியைத் திருமணஞ்சேரியில் ஏற்றுக் கொள்வதாகக் கூறிமறைந்தார்.

இறைவி திருத்துருத்தியில் அந்தணர் குலத்தோன்றலாகிய பரதமாமுனிவருக்கு அருமகவாய் அவரியற்றிய வேள்விக் குண்டலத்தில் தோன்றினர். இறைவனை மணவாளராகப் பெறுதற்பொருட்டுக் காவிரியில் மணலால் இலிங்கம் தாபித்து வழிபட்டாள். ஏழு நாட்கள் கழிந்தபின் இறைவன் வெளிப்பட்டனன். நந்தியெம்பெருமான் வாயிலாகத் தாம் திருமணம் செய்துகொள்ள வருவதைப் பரதமுனிவருக்கு அறிவித்துத் தாமே திருமணத்துக்கு எழுந்தருளினர்.

திருமணச்சடங்கிற்குக் குறுமுளைப்பாலிகை தெளித்த ஊர் குறுமுளைப்பாலிகை எனவும், வேள்விச் சடங்குகள் நிகழ்ந்த இடம் வேள்விக்குடி எனவும், மாப்பிள்ளையை எதிர்கொண்டழைத்த இடம் எதிர்கொள்பாடி எனவும் திருமணம் செய்துகொண்ட இடம் திருமணஞ்சேரி எனவும் பெயர் பெற்றதெனக் கூறுவர்.

" எதிரி லாதவன் இலிங்க மாதலும்
எதிரின் மாதவர் இலேகர் யாவரும்
எதிர்கொள் தேமென இசைக்கும் ஏதுவால்
எதிர்கொள் பாடியென் நியம்பி னரரோ "

என்பது திருத்துருத்திப் புராணம்.

மணக்கோலத்துடன் வந்த அன்பனுள அரச குமாரன் ஒருவனை இத்தலத்து இறைவன் மாமனாராகச் சென்று எதிர்கொண்டழைத்துச் சென்ற காரணத்தினுல் இத்தலம் எதிர்கொள்பாடி என்று வழங்கப் பெற்றதென்றும் கூறுவர்.

**கோயிலமைப்பு :**

திருமணஞ்சேரிக்கு மேற்கில் விளங்கும் இத்தலம் சின்னஞ்சிறிய கிராமமாகத் திகழ்கிறது. மேற்கு நோக்கிய கோயில். எதிரே திருக்குளம் அமைந்துள்ளது. திருக்குளத்திலிருந்து சந்நிதி வீதியின் வழியே கோயிலுக்குச் செல்லலாம். மூன்று

திலைக் கோபுரம் கோயில் வாயிலை அணி செய்கிறது. விநாயகர் பலிபீடம், நந்திதேவர் திருவுருவங்களை அடுத்து அர்த்த மண்டபம் விளங்குகிறது. புராணஐதீகங்கள் கதைச் சிற்பங்களில் அமைக்கப்பெற்றுள்ளன. பிராகாரமும் திருக்கோயிலும் மிக்க தூய்மையோடு பரிபாலிக்கப்படுகின்றன.

பிள்ளையார், முருகன் சந்நிதிகள் அழகுற விளங்குகின்றன. அர்த்த மண்டபத்தின் வழியே மகாமண்டபத்தை அடைந்து சுவாமி சந்நிதியில் நிற்கும்போது நம் மனம் இறைவன்பால் குவிவதை உணரலாம்.

எட்டாம் நூற்றூண்டில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தை அடைந்து, வழிபட்டு, நம்மையெல்லாம் இறைவன்பால் ஆற்றுப்படுத்தி உரைத்தருளிய,

" மத்த யானையேறி மன்னர்சூழ வருவீர்காள்
செத்த போதில் யாரும்இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தஉள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர்கோயில் எதிர்கொள்பாடி என்பதுஅடைவோமே"

என்ற திருப்பதிகப் பாடலை ஓதி வழிபடலாம்.

உலகத்தினது நிலையாமையையும் துன்ப நிலையினையும் நெஞ்சிற்கு அறிவுறுத்தி இறைவனை அடைவதே நமக்கு உறுதி பயப்பதாகும்என்று சுந்தரர் கூறும் இப்பதிகப்பாடல் நம் சிந்தனையை நெகிழ்விக்கிறது.

மகா மண்டபத்தில் அம்பாள் சந்நிதியில் தல ஐதீக ஓவியங் களும் பதிகங்களும் எழுதப்பெற்றுள்ளன. அவற்றால் தலப் பெருமைகளை அறியலாம். சுவாமி சந்நிதிக்கு அருகில் பஞ்ச மூர்த்திகளின் திருவுருவங்கள் விளங்குகின்றன.

மூர்த்திகள் :

ஐராவதம் பூசித்துப் பேறெய்தியதலம். இறைவன் திருப்பெயர் ஐராவதேசுவரர். அம்பாள்பெயர் மலர்க்குழல் நாயகி. வடமொழியில் சுகந்தகுந்தளாம்பிகை என் வழங்கப்படுகிறது. தீர்த்தம் - ஐராவத தீர்த்தம்.

ஐராவதம் வழிபட்டது :

அமராவதியில் இந்திரன் வெள்ளை யானையின்மேல் அசுரரை வென்ற வெற்றிக்களிப்போடு உலா வந்தான். அங்குவந்த

துருவாசமுனிவர் சிவபெருமானுக்குச் சாத்தப்பெற்ற தாமரை மலரை அவனுக்குத் தந்தார். இந்திரன் செருக்கோடு அதனை வாங்கி யானையின்மீது வைத்தான். யானை, அம்மலரைத் துதிக்கையால் எடுத்துக் காலடியில் இட்டுச் சிதைத்தது.

பாண்டியமன்னன் எறியும் வளையினால் இந்திரன் முடி சிதறுமாறும், வெள்ளையானை காட்டானையாகுமாறும் முனிவர் சபித்தார். இந்திரனும் ஐராவதமும் கழுவாய் வேண்டினர். இந்திரன் தலைக்கு வந்தது முடியோடு கழியுமென்றும், வெள்ளை யானை காட்டானையாகி நூறாண்டு கழிந்தபின் வெள்ளையானை யாகுமென்றும் முனிவர் கழுவாய் கூறினர்.

ஐராவதம் மண்ணுலகிற்கு வந்து காட்டானைகளோடு திரிந்தது. பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டது. எதிர்கொள்பாடி வந்து நீராடி இறைவனை வழிபட்டு அருள் பெற்றது. முடிவில் மதுரை சென்று பொற்றாமரையில் நீராடி உண்மை உருப்பெற்று அமராவதி சென்றது.

" வேந்தன் ஊர்தரு வெள்ளை யானையும்
போந்து நீர்முகந் தாட்டிப் பூநறுஞ்
சாந்தம் ஆதிய தழுவிப் பூசியா
ஏந்து தன்பெயர் இட்டுத் தாழ்ந்ததே. "

" அந்தநாள் அயிராவதேசன் என்று
எந்த வானவரும் எடுத்துக் கூறினர் "

என்பது திருத்துருத்திப் புராணம்.

கல்வெட்டுக்கள் :

திருக்கோயில் சுவர்களில் கல்வெட்டுக்கள் பல உள்ளன அவை படி எடுக்கப்பெற்றுள்ளன. கருங்கற்றளியாக்கியவன் குலோத்துங்க சோழன் காலத்து விளங்கிய கீரனூர் கிழவன் அரசுக் குடியான் திருநீலகண்டன் சேரமான்சோழனுவான். இறைவர்பெயர்: எதிர்கொள்பாடிஉடையார் எனவும், இறைவியார் பெயர் பெருங்கருணைப்பிராட்டியார்எனவும் குறிக்கப்பட்டுள்ளன. மூன்று நிலைக் கோபுரத்தைக் கட்டியவர் தொண்டை மண்டலம் குன்றத்தூர் நாராயணமுதலியார் மகன் வயிர முதலியார் ஆவர். ஆலாலசுந்தரன் குகை என்ற பெயரில் திருமடம் இருந்ததெனத் தெரிகிறது.

## திருமணஞ்சேரி

குத்தாலத்தின் வடக்கே அஞ்சலாற்றங்கரையை அடுத்து ஓடும் அம்மனுற்றின் கரைவழியே 2 கல் வடக்கு நோக்கிச் சென்ருல் இத்தலத்தை அடையலாம்.

இறைவன், பரதமுனிவர் மகளாகத் தோன்றிய உமையம்மையைத் திருமணம் புரிந்துகொண்ட தலம். இத்தலத்தில் விளங்கும் கல்யாணசுந்தரர் திருவுருவம் மிகச் சிறப்புடையது. திருமணம் கைகூடாமல் தடைப்பட்டு நிற்கும் பெண்களும் ஆண்களும் இங்குள்ள கல்யாணசுந்தரருக்கு மாலை அணிவித்து அர்ச்சனை செய்து வழிபட்டால் விரைவில் மணங்கூடப்பெறுவர் என்பது இத்தலத்திற்குள்ள தனிச் சிறப்பாகும்.

### கோயிலமைப்பு :

திருமணஞ்சேரி நாற்புறமும் சோலைகளால் சூழப்பெற்று விளங்கும் அழகிய கிராமம். கிழக்கே அம்மனுறு ஊருக்கு அழகு செய்கிறது. நான்கு வீதிகளையுடையது. கோயிலைச்சுற்றி அகழி அமைந்துள்ளது. பெருமானுக்கு நடைபெற்ற திருக்கல்யாண விழாவைக்காண ஏழு கடல்களும் மாலைபோல அகழியாகக் கோயிலைச் சூழ்ந்துள்ளன என்பது தலபுராணம்.

கிழக்கு நோக்கிய திருக்கோயில். சந்நிதி வீதிவழியே திருக்கோயிலின் இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் விநாயகர் துவஜஸ்தம்பம் (கொடிமரம்) பலிபீடம், நந்தி மண்டபம் முதலியன அமைந்துள்ளன. வெளித் திருச்சுற்றை வலம் வந்து, கட்டைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்ருல் மகாமண்டபத்தை அடையலாம். விநாயகர் சோபனமண்டபத்தின் முன்புற வாயிலில் வரசித்தி விநாயகராகக் கோயில் கொண்டுள்ளார்.

அர்த்த மண்டபத்தை அடைந்தால் துவாரபாலகர்கள் நந்தி-தேவருடன் கர்ப்பக்கிருகத்தில் ஸ்ரீ அருள்வள்ளல்நாதர் (உத்வாகநாதர்) காட்சியளிக்கிருர்.

"அயிலாரும் அம்பதனல் புரம் மூன்றெய்து
குயிலாரும் மென்மொழியாள் ஒரு கூருகி
மயிலாரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின்ருர்க் கில்லை பாவமே"

என்று ஞானசம்பந்தரருளிய தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபட்டு வெளியில் வருகின்ற நம்மை அர்த்தமண்டபத்தில் விளங்கும் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவுருவம் கவர்கின்றது.

அப்பெருமானுடைய இனித்தமுடைய எடுத்த பொற் பாதத்தைக் கண்டு வணங்கி ஸ்ரீ கல்யாணசுந்தரர் சந்நிதியை அடையலாம். கிழக்குமுகமாகத் தனி விமானத்தில் அம்பிகையைக் கைப்பற்றிக் கல்யாணக் கோலத்தோடுவிளங்கும் இம்மூர்த்தி நம் நெஞ்சில் நிலையான இடம் பெறுகின்றார்.

அன்பர்கள் திருமணம் வேண்டி அணிவித்த மாலைகளும் மணங்கூடியபின் வந்து தரிசித்து அளித்த காணிக்கைப் பொருள்களும் சந்நிதியில் விளங்குகின்றன. கல்யாணசுந்தரர் தரிசனத்துக்குப்பின் அம்பாள் சந்நிதியை அடைந்தால், அங்குக் குயிலினும் மென்மொழியம்மை (கோகிலாம்பாள்) மணமேடையில் மணப்பெண் அமர்ந்திருப்பது போலச் சுகாசனத்தில் வீற்றிருந்து காட்சி தருவது இத்தலத்திற்குள்ள சிறப்புக்களில் ஒன்றாகும்.

உள்பிராகாரத்தில் வலம் வரும்போது ஸ்ரீ நடராஜர் சபையின் எதிர்புறம் நால்வர் திருவுருவங்கள் தனி மண்டபத்தில் உள்ளன. கர்ப்பக்கிருகத்தின் தென்புறமாடங்களில் பிக்ஷாடனார், பாலகணபதி, நடராஜர், யோக தக்ஷிணாமூர்த்தி, மேல்புறம் லிங்கோற்பவர், வடபுறம் பிர்மா, ஆதிசேஷன், துர்க்கை, முதலிய திருவுருவங்கள் உள்ளன.

ஆலயத்தின் கன்னிமூலையில் அழகவிநாயகர் சந்நிதியும் திருமாளிகைப் பத்தியில் சுப்பிரமணியர் சந்நிதியும், மேல்புறம் இருபெருந்தேவியருடன் ஸ்ரீ மகாவிஷ்ணு சந்நிதியும், லக்ஷ்மி சந்நிதியும், பரதமகரிஷி செம்பியன் மாதேவி, மல்லப்ப நாயக்கர் உருவங்களும் உள்ளன.

கீழைத் திருமாளிகைப்பத்தியில் பைரவர், சூரியன் சனி பகவான், பச்சை நாதேசுவரர் (ருத்ரவனேசுவரர்), பச்சை நாயகி (ருத்ரவனேசுவரி) இவர்கள் திருவுருவங்கள் உள்ளன.

## மூர்த்திகள் :

சுவாமி பெயர் – அருள்வள்ளல்நாதர். வடமொழியில் உத்வாகநாதர் என வழங்கப்பெறுகிறார். அம்பாள் பெயர் – ஸ்ரீ குயிலினும் மென்மொழியம்மை. ஞானசம்பந்தர் தேவாரத்தில் 'குயிலாரும் மென்மொழியாள் ஒரு கூறாகி விளங்குகின்றான்' என இத்தலத்து இறைவனைப் பாடியருளுகின்றார். வடமொழியில் கோகிலாம்பாள் என வழங்குவர். யாழினும் மென்மொழியம்மை எனவும் அம்பாள் பெயர் வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் கோகிலாம்பாளைக் கைப்பிடித்து விளங்கும் கல்யாணசுந்தரர், நடராஜர் திருவுருவங்கள் பேரழகுடையன. ஆதிசேஷன் திருவுருவம் இத்தலத்தின் பெருமைக்குரியதாக விளங்குகின்றது.

இராகு தோஷத்தினுல் பீடிக்கப்பட்டு மக்கட்பேறு பெருதவர் இங்குள்ள ஏழுகடல் தீர்த்தத்தில் நீராடி ஆதிசேடனுக்குப் பால் அபிடேகமும் பால்பொங்கல் நிவேதனமும் செய்து சாப்பிட்டால் இராகு தோஷம் நீங்கப்பெற்று புத்திரப்பேறு பெறுவர்.

தலமரம் – வன்னி. தீர்த்தம் – சப்தசாகரம்.

## பார்வதி திருமணம் :

உமையம்மைக்கும் சிவபிரானுக்கும் நிகழ்ந்த மூன்று திருமணங்களில் பார்வதி திருமணமும், தடாதகை திருமணமும், (மீனுட்சி திருமணம்) கந்தபுராணத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் கூறப்படுகின்றன. உமையம்மையை மகளாகப் பெறுதற்பொருட்டு இமவான் தவஞ் செய்தான் அத்தவத்தின் காரணமாக அம்பிகை மானசவாவியில் தாமரை மலரொன்றில் சிறுகுழந்தையாய் அவனை அடைந்து இமவான் மனைவி மேனை யால் வளர்க்கப்பெற்ருள்.

ஐந்து வயதில் தவச்சாலையில் தங்கி இறைவனை மணம்புரிய விரும்பித் தவம் செய்து வந்தாள். இறைவன் மூதிய துறவியாய்த் தவச் சாலையை அடைந்து பார்வதி தேவியின் மன உறுதியை அறிந்தான். சப்த ரிஷிகளை மணம் பேச அனுப்பி இமவான் உடன்பாடு பெற்று மணநாள் குறித்து அவன் நகருக்கு அரி அயன் முதலிய அனைத்துத் தேவர்களோடும் எழுந்தருளி வந்து பார்வதிதேவியைத் திருமணம் புரிந்து கொண்டார்.

## தடாதகை திருமணம் : (மீனுட்சி திருமணம்)

மலயத்துவச பாண்டியன் பிள்ளைப்பேறு கருதி வேள்வி செய்தான். வேள்விக் குண்டத்தில் அம்பிகை சின்னஞ்சிறு குழந்தையாய் மலயத்துவச பாண்டியனுக்கு மகளாய் வெளிப் பட்டாள். குழந்தை இயற்கைக்கு மாருக மூன்று நகில்களோடு தோன்றியதை அறிந்த மன்னன் வருந்தினன் " இப்பெண்ணுக்குக் கணவன் வரும்போது ஒரு நகில்மறையும்; கவலற்க " என இறைவன் அசரீரி அருளினன். மன்னன் மனம் மிக மகிழ்ந்து தடாதகை எனப் பெயர்சூட்டி வளர்த்தான். உரிய பருவத்தில்

மகளுக்கு மணிமுடி சூட்டி மறைந்தாள். தடாதகை பெரும் படையோடு திக்குவிசயம் புறப்பட்டாள். எட்டுத்திக்குகளையும் வென்று முடிவில் கயிலையை முற்றுகையிட்டாள்.

சிவகணங்கள் போரிட முடியாது தோற்றன. இறைவனே போர்க்கோலம்பூண்டு வெளிப்பட்டான். ஐயனின் அழகிய தோற்றங்கண்ட அம்பிகையின் நகிலொன்று மறைந்தது. நாணத்தினால் முகங்கவிழ்ந்தாள். இறைவன் மதுரை மா நகருக்கு எழுந்தருளிமுறைப்படி மணமுடித்து சோமசுந்தரபாண்டியனைத் தென்னாடு ஆண்டு விளங்கினன். இத்திருமணங்களைப் போலவே இத்தலவரலாற்றில் வரும் திருமணமும் சிறப்புடையதாகும்.

## பரதமுனிவர் மகளாய்த் தோன்றி இறைவனை மணந்தது :

உமைநங்கையார் ஈசனை வணங்கி மற்றுமொரு முறை தங்களை மணந்து இன்புற வேண்டுமென வரங்கேட்டார். இறைவனும் அதற்கிணங்கி அருள் வழங்கினன். திருத்துருத்தியில் பரதமுனிவரின் மகளாய், அவர் செய்த வேள்விக்குண்டத்தில் உமையம்மையார் வெளிப்பட்டு இத்தலத்தில் இறைவனை மணந்து இன்புற்றார். இவ்வரலாறு முன்பே குறிக்கப் பெற்றுள்ளது

## ஆமை உருவை மாற்றி அருள் புரிந்தது :

வணிகப்பெண்டிர் இருவர் தங்களுக்குப் பிடிக்கும் குழந்தைகளை ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் சம்பந்தம் செய்து கொள்வதாக உறுதி செய்துகொண்டனர். ஒருத்திபெண் பெற்றாள். மற்றொருத்திக்குப் பிறந்தது ஆமையாய் இருந்ததால் தன் பெண்ணைக் கொடுக்க மறுத்தாள். ஆமை வடிவொடு பிறந்தவன் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு மனித உருப் பெற்று அப்பெண்ணை மணந்து வாழ்ந்ததாக இத்தல வரலாறு கூறுகிறது.

## மன்மதனுக்கு அருள் செய்தது :

பார்வதி தேவி பரமனைப்பிரிந்து இமவான்மகளாய்ப்பிறந்து வளர்ந்த காலத்தில் இறைவன் தனியே யோகியாய் விளங்கினன். இறைவன் அம்பிகையை மணந்தால்தான் முருகப்பெருமான் தோன்றுவார், அசுரர்பயம் தொலையும் என்றெண்ணியதேவர்கள் மன்மதனை ஏவி இறைவன்மீது காமக்கணை தொடுக்குமாறு தூண்டினர். காமன் கரும்புவில் வளைத்து இறைவன்மீது

மோகக்கணை தொடுத்தான். இறைவனது நெற்றி விழியால் இறந்தொழிந்தான் காமன். காமதகனம் நடந்த தலம் இத்தலத்திற்கருகிலுள்ள திருக்குறுக்கையாகும்.

இரதி தேவியின் வேண்டுகோளுக்கிணங்கி பெருமான் மன்மதனை மீண்டும் உயிர் பெற்றெழச்செய்தான். மன்மதன் தான் செய்த பிழையைப் பொறுக்குமாறு இத்தலத்திற்கு வந்த இறைவனை வழிபட்டு அருள் பெற்றுச் சென்றான் என்பது இத் தல வரலாருகும்.

**திருவிழா :**

வருடந்தோறும் சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் பெருமானுக்குத் திருக்கல்யாணத் திருவிழா நடைபெறுகிறது. நாடோறும் நான்கு கால பூசைகள் நிகழ்கின்றன.

**கல்வெட்டு :**

இக்கோயிலில் 28 சோழர் காலக் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டைச் சேர்ந்ததெனக் குறிக்கப்படுகிறது. சுவாமி பெயர்— திருக்கற்றளிமாதேவர். பரமசுவாமி எனக் கூறப்பட்டுள்ளது. விளக்குக்காக வழங்கிய தானங்களும் நில தானங்களும் அணிகலன்கள் அளிக்கப் பெற்ற செய்திகளும் கூறப்பெற்றுள்ளன. கோபுரம்கட்டியவர்— நல்லம நாயக்கர். 1934 ஆம் ஆண்டிலும் 1947 ஆம் ஆண்டிலும் 1970 ஆம் ஆண்டிலும் மகா கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்துள்ளன.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

I visited this temple with my wife today. we were both impressed by the design of the temple its grandieur and the neat and clean atmosphere. I would like to visit the place again whenever I came this side.

(Sd.) R. Y. Joshi,
Zonal Manager. L. I. C.
South Zone

3—8—76.

# சித்தாந்தம் - பிரச்னமாலை

## (கேள்வித்தொடர்)

சிரோமணி, பிரவசனரத்னம்,

பிர்மஸ்ரீ P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,

தருமபுரம்.

முன்னொரு காலத்தில் பகவான் நந்திகேசுவரர், உலகில் மக்கள் (பசுக்கள்) படும் அல்லல்களைக் கண்டார். பசுக்களின் ஞானசக்தியும் கிரியா சக்தியும் அனாதியான மலத்தால் மறைக்கப்பட்டு பிறப்பு இறப்புத் தொடரால் மனங்கலங்கி நிற்கின்றனர் மக்கள். அவர்கள் அல்லல்களிலிருந்து விடுபட்டு உய்ய ஈசனருளால் தோன்றிய வேதங்களிலும் ஆகமங்களிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாக எண்ணி ஐயப்பாடு கொண்டனர். உலகத் தோற்றத்திற்கு முதற் காரணம் பிரும்மம் என்று ஓரிடத்திலும், மாயைதான் என்று வேறு இடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. வீடு பெறுதல் (மோக்ஷம்) சிவனுக்கொப்பாக ஆகுதல் என்றும் சிவனுடன் ஒன்றுக் கலத்தல் என்றும் காணப்படுகிறது. வீடு பெறக் காரணம் தீக்ஷைதான் என ஓரிடத்திலும், ஞானம்தான் என மற்றோரிடத்திலும் மாறுபாடாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாசங்கள் மூன்றென ஓரிடத்திலும், நான்கென வேறிடத்திலும் ஐந்தென மற்றோரிடத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுபோன்று பல மாறுபட்ட கருத்துக்களைக்கண்டு பகவான் நந்திகேசுவரருக்கும் ஐயப்பாடு தோன்றிற்று. அவர் உண்மைப் பொருளை ஐயமற அறிந்து பசுக்களுக்கு வழிகாட்டக்கருதினார். கயிலையில் மாயா வடிவமான ஆல்மரத்தினடியில் வீராசனத்தில் வீற்றிருந்த சச்சிதானந்த வடிவமாகிய ஸ்ரீ கண்டேசுவரரை அடைந்து அவரடி பணிந்து, துதிபாடி தனது ஐயந்தீர, கேள்வித் தொடரைக் கேட்கலானார்.

'பிரபோ! இவ்வுலகம் அனாதியா? அல்லது தொடக்கமுள்ளதா? தொடக்கமுண்டெனில் தானாகத் தோன்றியதா? அல்லது அதன் தோற்றத்துக்கு வேறு ஒரு காரணம் உண்டா?

---

குறிப்பு :- சிவஞானபோதத்திற்கு ஸ்ரீ சிவாக்ரயோகிகள் எழுதிய பாடியத்திலிருந்து எடுத்து எழுதியது.

உண்டெனில் அது காலமா? கன்மமா? சேதனனா? சேதனன் தான் எனில் அவன் ஒரு ஸம்ஸாரியா? அல்லது அந்தந்த கல்ப முடிவில் முக்தியடைந்தவரா? அனுதிமுக்தரா? அனுதி முக்தரெனில் ஒருவரா? பலரா? அவர் இரணியகர்பர் முதலியவர் களைவிட மாறுபட்டவர் என்பதற்கு அளவை (பிரமாணம்) என்ன? அவருக்கு இலக்கணம் யாது? அவர் பெயர் என்ன?

ஹரன் (சிவன்) தான் கர்த்தர் எனில் உலகுக்கு முதற் காரணம் (உபாதான காரணம்) உண்டா? இல்லையா? உண்டெனில் அது பரமாணுவா? பிரகிருதியா? (பிரதானமா) தனித்த மாயையா? தனித்த ஈசுவரனா? அல்லது மாயையுடன் கூடிய ஈசுவரனா?

உலக சிருஷ்டி எல்லாம் ஒன்றாகத் தோன்றியதா? (ஸங்காத ரூபமா?) அல்லது ஆரம்பவடிவமா? பரிணாமமா? (மாறுபாடா?) விவர்தமா? (தோற்றமா?) அல்லது காரணங்களின் கூட்டமா? மனோவிருத்தியா? அவ்வாறெனில் அது கன்மத்தை எதிர் பாராத ஈசுவரனுக்கடங்கியதா? கன்மத்தை எதிர்பார்க்கும் ஈசுவரனுக்கு உட்பட்டதா? சிருஷ்டி ஈசுவரனுக்கு ஒரு விளை யாட்டா? பயன் கருதியா? பயன் உண்டு எனில் அது தமக்கா? பிறருக்கா? படைத்தலுக்குக் கரணம் (கருவி) உண்டா? உண்டெனில் அது அவரது உடற்செயலா? ஐம்பொறிகளா? அந்தக் கரணமா? கன்மமா? பிந்துவா? சக்தியா? சக்தி எனில் அது ஒன்று? பலவா? ஒன்றெனில் அது சிவத்தோடு எவ்வாறு சேர்ந்துள்ளது? ஸம்யோக ஸம்பந்தமா? சமவாய சம்பந்தமா? அது ஜடமா? ஜடமற்றதா? (அறிவுள்ளதா?)

ஜீவன் எனப்படுவது சூன்யமா? உடலா? பிராணவாயுவா? பொறிகளா? அந்தக் கரணங்களின் கூட்டமா? ஆலய விஞ்ஞானமா? ("நான்" என்ற ஞானமா?) அது ஜடமா? அஜடமா? அது கர்த்தாவா? இல்லையா? அது அணுவடிவத்தில் உள்ளதா? விபுவா? (எங்கும் பரந்த பேருருவம்) விபு எனில் அது ஒன்று? பலவா? பல எனில் அது சிற்றறிவுள்ளதா? பேரறிவுள்ளதா? எல்லாமறிந்ததெனில் அதற்கு ஐந்து அவத்தைகள் எங்ஙனம்? ஞானமின்மையாலா? தவறான அறிவாலா? ஈதென்று சொல்ல முடியாத அவித்யையாலா? அல்லது ஆணவ மலத்தினலா?

மலம் காரணம் எனில் அது ஒரு பொருளா? (திரவ்யம்) பொருள் எனில் அதற்கும் ஆன்மாவுக்கும் எவ்விதத் தொடர்பு? ஸம்யோகத் தொடர்பெனில் அது தோற்றுவிக்கப்பட்டதா? அது

ஒவ்வொரு மனிதனுக்கும் மாறுபட்டதா? மாறுபடாததா? மாறுபாடற்றதெனில் அது ஒரு விசித்திர சக்தி வாய்ந்ததா? அது நித்யமா? அநித்யமா? (அழியும் தன்மை யுடையதா?)

ஜீவன் சுதந்திரனா? பரதந்திரனா (பிறருக்குள்பட்டதா?) பரதந்திரனெனில் அதை ஆட்டி வைப்பது ஈசுவரனின் செயலா? ஈசுவர ஸன்னிதானமா? ஸன்னிதி என்பது அருகிலிருப்பதா? அல்லது சக்தி மாத்திரமா?

அவ்வாறுள்ள சிவன் அளவைகளால் (பிரமாணங்களால்) அறியத்தக்கவரா? ஞானவடிவமுள்ளவரா? ஆம் எனில் அவர் முற்றிலும் காணமுடியாதவரா? அல்லது ஸ்வரூபஞானத்தால் பிரகாசமாகக் கூடியவரா? அவர் ஞானத்தை மாத்திரம் தனது வடிவாகக் கொண்டவரா? அல்லது இன்ப வடிவமாகவும் உள்ளவரா? அதற்குப் பிரமாணம் யாது? ஆகமங்களா?

பசு, பாசம் இவைகளுக்கு இலக்கணம் யாது? வீடு பேறுதலுக்குச்சாதனம் யாது? கன்ம மாத்திரம் ஸாதனமா? அல்லது ஞானம் மாத்திரம் சாதனமா அல்லது அவ்விரண்டும் காரணங்களா? இரண்டும் எனில் இரண்டும் முக்ய சாதனமா? ஒன்று முக்யம் எனில் எது முக்யம்? எது அங்கம்? முக்திக்கு சாதனம் ஞானம் என்றால் பசு வேறு சிவன் வேறு என்று பிரித்தறியும் ஞானமா? அல்லது இரண்டும் ஒன்று என்ற ஞானமா?

ஆகமப் பொருளை அறியவும் கேட்கவும் உரிமைசமயதீக்ஷை பெற்றவர்களுக்கு மட்டுமா? தீக்ஷைக்கு இலக்கணம் யாது? அது எத்தனை வகைப்படும்? அத்வாக்களின் இலக்கணம் யாது? சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் என்று கூறுவது எதைப் பொறுத்தது?

முக்தியளிப்பவர் குருவா? சிறந்த ஜீவனா? சிவனா? ஜீவன் முக்தனுக்குக் கடமைகளுண்டா? அவருடைய உடலின் நிலை எதைப்பொருத்தது? அவருக்கு, அநுபவத்தால் பிராரத்த கன்மங்கள் அழிந்திடினும் ஆகாமிகன்மங்கள் ஏன் உண்டாவதில்லை?

மோக்ஷம் என்பது உடல் அழிவு மாத்திரமா? பிருகிருதி புருஷவிவேகத்தால் புருஷன் தனது ஸ்வரூபத்தில் நிற்கும் தனி நிலையா அல்லது முற்றிலும் துயரற்ற நிலையா? அழியா இன்ப நுகர்ச்சியா அவித்யை விலகுதலா? பரமாத்மாவினிடத்தில் லயமா? சிவஸாயுஜ்யமா? சிவஸாம்யமா? அல்லது பரமசிவ ரூபமாகத் தோற்றமா?

இவ்வாறு சைவ சித்தாந்தப்பொருளை ஐயமறத்தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் கேள்வித் தொடரை சமர்ப்பித்த நந்திகேசுவரபகவானிடம் பகவான் ஸ்ரீ கண்டநாதர் மிருந்த அன்புகொண்டு அவரைப் பாராட்டி, எல்லாவித ஐயப்பாடுகளை யும் தீர்த்து வீடுபெற உண்மையான வழியைக் கூறுவது சைவ சித்தாந்தமேயாகுமென்று சொல்லி, அனந்தேசரிடமிருந்து தான் பெற்றதும் ரௌரவாகமத்தில் அடங்கியதும் 'சிவஞானபோதம்' எனப் பெயர் கொண்டதாயும் உள்ள 12 சூத்திரங்கள் வடிவத் தில் உள்ள சாத்திரத்தை உபதேசித்தருளினர்.

அவைகளாவன :—

ஸ்த்ரீ பும் நபும் ஸ காதித் வாத் ஜகத: கார்ய தர்சனத் ।
அஸ்தி கர்தா ஸ ஹருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மாத் ப்ரபு : ஹர : ॥

அன்ய ஸ் ஸந் வ்யாப்திதோ ஃ நநிய: கர்தா கர்மா நுஸாரத: ।
கரோதி ஸம் ஸ்ருதிம் பும்ஸாம ஆக்ஞயா ஸமவேதயா । (2)

நேதிதோ மமதோத்ரேகாத் அக்ஷோபரதி போதத: ।
ஸ்வாபே நிர்போகதோ போத போத்ருத்வாத் அஸ்த்யணு
[ஸ்தநௌ (3)

ஆத்மா ஃ ந்த: கரணு தந்யோ ஃ ப்யந்விதோ மந்த்ரீ பூபவத் ।
அவஸ்தா பஞ்சக ஸ்தோ ஃ தோ மலருத்த ஸ்வ த்ருக்ரிய: ॥ (4)

வித ந்த்யக்ஷாணி பும்ஸா ஃ ர்த்தாந் ந ஸ்வயம் ஸோபி சம்புநா ।
தத்விகாரீ சிவச் சேத் ந காந்தோ ஃ யோவத் ஸ தந்நயேத் ॥ (5)

அத்ருச்யம் சேத் அஸத் பாவ: த்ருச்யம் சேத் ஜடிமா பவேத் ।
சம்போ: தத் வ்யதிரேகேண ஞேயம் ரூபம் விதுர் புதா: ॥ (6)

நாசித் ஸந்நிதௌ கிந்து ந வித்தஸ்தே உபே மித: ।
ப்ரபஞ்ச சிவயோர் வேத்தா ய: ஸ ஆத்மா தயோ: ப்ருதக் ॥ (7)

ஸ்தித்வா ஸஹேந்த்ரிய வ்யாதை: த்வாம் ந வேத்ஸிதி போதித: ।
முக்த்வைதாந் குருணு ஃ நந்ய: தந்ய: ப்ராப்நோதி தத் பதம் ॥ (8)

சித் த்ருசா ஃஃ த்மநி த்ருஷ்ட்வேசம் த்யக்த்வா ஃஃ வ்ருதி மரீசிகாம் ।
லப்த்வா சிவ பதச்சாயாம் த்யாயேத் பஞ்சாக்ஷரம் ஸுதீ: ॥ (9)

சிவே ந ஐக்யங்கத: ஸித்த: ததநீன ஸ்வ வ்ருத்திக: ।
மலமா யாத்ய ஸம்ஸ்பருஷ்ட: பவதி ஸ்வாநு பூதி மாந் ॥ (10)

த்ருசோ தர்சயிதேவாத்மா தஸ்ய தர்சயிதா சிவ: ।
தஸ் மாத் தஸ்மிந் பராம் பக்திம் குர்யாத் ஆத்மோபகாரகே ॥

முக்த்யை ப்ராப்ய ஸதஸ் தேஷாம் பஜேத்வேஷம் சிவாலயம்
இத் தம் வித்யாத் சிவ ஞானபோதே சைவார்த்த நிர்ணயம் ॥ (12)

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 35. இதழ் 9. பக்கம் 369 இன் தொடர்ச்சி )

இந்நூலைச் சொன்னவன்றான் இங்கிருந்தான் என்னில்,
இவன்இருத்தி ஏத்தும் அவன் எங்கிருந்தான்? அவனோ
அந்நூலோ குருவந்த அடைவும்உனக் கில்லை;
அடைவுதரின் முடிவின்கண் அநாதி போதன்
சொன்னானும்; அவைவேதா கமங்க ளாகும்;
சுருக்கினான் தவம்புரியச் சொல்லுவதெல்லோரும்;
உன்னூல்கண் கழுவாதே உதிப்பதன்முன் புலாலோ
டுண்பான்ஓர் ஊன்பிரியன் உரைத்ததொரு நூலே 103

## இதன் தெளிபொருள்

'இப்பொழுது உள்ள இந்தப் பிடகநூல் ஆசிரியன்தான் எங்கள் கோயிலில் இருக்கின்றான்' என்று நீ கூறினால், இவனால் வழிபடப்படும் குரு யாவன்? அவன் எங்கே இருக்கின்றான்?

இவன் தனக்குக் குரு இல்லாமலே ஞானத்தைப் பெற்றான் என்றால், மற்றவர்களும் இவனையோ, மற்றவர்களையோ குருவாகக்கொள்ளாமல் தாங்களே ஞானத்தை அடையலாம். ஆகவே, இவனை யாவரும் வழிபட்டு இவன் சொன்ன நூலை ஏற்றாக வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. ஆகையால்,

'இவனுக்குக் குரு இன்னான்' என்று சொல்லமாட்டாத உனது மதத்திற்கு முதல் நூல் செய்த ஆசிரியனோ, அவனது நூலின்வழி மரபு நிலை திரியாது வரும் நூல்களோ, குரு பரம்பரையோ இல்லை. நீயும் முதல் நூல் செய்த முதல்வன் ஒருவனைச் சொல்வதாயின், அவன் தனக்கு ஒரு குரு வேண்டாத அநாதி போதனாய் - இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனாய்

இருப்பவனாகத்தான் சொல்ல வேண்டும். அநாதி போதம் உன்மதத்தில் இல்லை. ஆகவே, அத்தகையோன் எங்கள் சிவபெருமானே. அவன் சொன்ன முதல் நூல்கள் சிவாகமங்களே. ஆகையால் அவற்றையே நீயும் உடன்படல்வேண்டும்.

இனி எல்லாச் சமயங்களும் 'தவமாவது உண்டி சுருங்கிப் புலால் உண்டலை அறவே விடுத்துச் செய்வது' என்று கூற உனது பிடகாகமம் 'உயிர்களைக் கொல்லத்தான் கூடாது; கொல்லப்பட்ட உயிர்களின் ஊனை உண்ணலாம்' என்று கூறுவதால், அது, காலையில் எழுந்து கண்ணைக்கூடக் கழுவாமல் புலால் உண்டலைச் செய்யும் ஊன்பிரியன் ஒருவன் செய்ததாகவே இருத்தல் வேண்டும்.

## விளக்கம்

இடையில் தந்துரைத்தன இசை எச்சமாய் நின்ற குறிப்புப் பொருள்களாம். (9)

முன்னூலும் வழிநூலும் சார்பு நூலும்
மூன்றுரும் உலகத்து மொழிந்த நூல்கள்
இந்நூலில் உன்நூல்இங் கெந்நூல் என்னில்
இன்நூல்காண் என்நூல்என் நியம்பமாட்டாய்;
உன்நூலும் ஒருநூலாய் உரைப்ப தென்றே!
உலண்டுநூல்; பருத்திநூல்; சிலம்பிநூல்கள்
அந்நூலும் அல்லாத பொய்ந்நூல் கொண்டிங்
கறம்நோற்றுத் திரிந்தவா றழகி தாமே. 104

## இதன் தெளிபொருள்

உலகத்தில் 'நூல்கள்' எனப்படுவன 'முதல் நூல், வழிநூல், சார்புநூல்' என்னும் மூன்றில் ஒன்றாயிருக்குமல்லது, வேறாய் இராது, அம்மூன்று வகைகளில் உன்மதத்து நூல் எந்த வகையைச் சார்ந்தது' என்று வினவினால், உன்னால் விடை கூற இயலாது. காரணம் முன்பாட்டில் காட்டப்பட்டது.

ஆகவே, உன் நூலையும் 'நூல்' என்று நீ சொல்லத் துணிவதற்குக் காரணம் நூல்களின் இயல்பை அறியாமையேயாம். அதனால் உனது நூலை, 'கல்விநூல்' என்று சொல்லலாகாது "உலண்டு நூல், பருத்திநூல், சிலம்பிநூல்" என்னும் இவை

களோடு ஒப்ப எவனே ஒருவன் தனது வினைவழியே தன் மனத்தில் தோன்றியவைகளைச் சொல்லிப் பொழுதுபோக்கிய நூலாகும். இன்னும் நுனித்து நோக்கினுல், 'உலண்டு நூல்' முதலியவைகளின் நூலாயினும் அவற்றின் பிழைப்புக்கு உதவுவதால் அவற்றிற்குக்கூட ஒப்பாகாமல், மாணுக்கரைத் தவருன வழியிற் செலுத்துகின்ற ஒரு நூலை நூலாகக் கொண்டு உன்னைப் போன்றவர்கள் அறத்தை மேற்கொண்டு திரிதல் மிகவும் அழகுடையதாய் இருக்கின்றது.

### விளக்கம்

'உலண்டு' என்பதும் ஒரு பூச்சி; அது தன்னையே தான் தனது வாய் நூலால் சுற்றிக்கொள்ளும்' என்பர்.

இவை நான்கு செய்யுளாலும் பௌத்த மத நூல் நூலாகாமையை விளக்கினர்.

(தொடரும்)

---

## பாம்பு கடித்தோரைக் குணமாக்கும் பஜனை

ஆச்சரியம்! ஆனல் உண்மை! பர்தோலி தாலுகாவிலுள்ள வாங்கனேர் கிராமத்து ஹரிஜனங்கள், பஜனை செய்தே பாம்பு கடித்தோரைக் குணப்படுத்துகிருர்கள்.

ஹரிஜன மாணவி,குமாரி இதாபஹென் ஈஸ்வர்லால், கிராம ஆரம்பப்பள்ளி யருகே மாலை வேளையில் விஷப்பாம்பால் கடியுண்டாள். உடனே விரைந்து வீட்டுக்கு வந்தாள். அவள் தன்னைப் பாம்பு கடித்து விட்டதெனக் கூறினள்.

கிராம ஹரிஜனங்கள் கூடினர், நெய் விளக்கேற்றி வைத்து பஜனைப்பாடல்களைப் பாடத் துவக்கினர். இரவு முழுதும் இடைவிடாது பஜனை நடந்தது. மறுநாள் காலை சுமார் 8-மணியளவில் விஷம் முழுதும் இறங்கிய மாணவி அன்றலர்ந்த மலரென எழுந்தாள்!

வாங்கனேர் கிராமத்து ஹரிஜனங்கள் பஜனைமூலம் பாம்புக்கடி விஷத்தை இறக்குவது இந்த வட்டாரத்தில் அனைவரும் அறிந்ததே. பாம்பால்கடிக்கப்பட்ட நபரின் வீட்டில்கூடி அவர்கள் பஜனை செய்வர். பஜனை முடியும்வரை அவர்கள் யாரும் உணவு உண்பதில்லை. பஜனை நடக்குமிடத்தில் உணவு சமைப்பதில்லை. பாம்பு கடிக்கப்பட்ட நபர் முற்றிலும் விஷம் நீங்கி எழுந்த பின்னரே பஜனையும் நிற்கும். அனைவரும் உணவும் உண்பர்.

நன்றி. — சூரத், 16—8—76 தினமணி.

# திருவண்ணாமலைச்சிவாலயம்

திருமுறைக் கலைஞர்,

**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

( மலர் 35, இதழ் 9. பக்கம் 378 இன் தொடர்ச்சி )

## அண்ணாமலை தோன்றிய வரலாறு :

முன்னொரு கற்பத்தில் பிரமனும் திருமாலும் தாம் தாம் தம் தொழிலில் பெரியவர் என்று மன மாறுபாடு கொண்டு வீண் சண்டை பலகாலம் இட்டனர். அச்சமயம் அவ்விருவர்களின் இடையில் சிவபெருமான் சோதிமயங்கொண்ட நீண்ட தூண் போல் நின்று " இச்சோதித் தூணின் அடியினையும் முடியினையும் எவர் அறிய வல்லரோ அவரே பெரியவர் " என்ற ஒரு திருவாக்கு அவர்கள் கேட்குமாறு கூறி அருளினார். உடனே பிரமன் அன்னப்பறவை வடிவுகொண்டு முடியினையும், திருமால் பன்றி வடிவுகொண்டு அடியினையும் தேடிக் காணச் சென்றனர்.

பின்னர் இருவரும் இறைவனின் அடிமுடிகளைக் காணவியலாது திரும்பிவந்து போற்றித் துதித்தனர். சிவபெருமான் அவர்களுக்கு அச்சோதித்தூணிலே தோன்றிக் காட்சி அளித்து அருள்புரிந்தார். பிறகு இத்திருவடிவாகவே எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றார் என்பது புராண வரலாறு.

இத்திருமலை பிரம விஷ்ணுக்களுக்கு அண்ணா ( அண்ணாத - எட்டாத - அறியமுடியாத ) மலையாக விளங்கியதால் அண்ணாமலை எனவும், திரு - அடைபெற்றுத் திருவண்ணாமலை எனவும் பெயர் பெறலாயிற்று, சோதிநிலையின்பொருட்டு இம்மலையின் உச்சியில் இன்றும் ஆண்டுக்கொருமுறை சோதி தரிசனம் காட்டப்பெற்று வருகிறது.

## தீப தரிசன மகிமை :

இத்திருவண்ணாமலையினது மலை உச்சியில் ஒவ்வொரு ஆண்டுதோறும் கார்த்திகைமாதம் பௌர்ணமி திதி கூடிய கார்த்திகை நட்சத்திரத்தில் மாலை 6 மணிக்கெல்லாம் நீண்ட

பெரிய செப்புக்கொப்பரை ஒன்றில் நெய், கற்பூரம், சல்லாம் புதிய துணி ஆகிய இவற்றை ஒன்றாகக் கலந்து நிரப்பி அதில், அருணாசலேசுவரர் திருக்கோயில் உள்சந்நிதியில் முதல்நாள் பரணி நட்சத்திரம் விடியற்காலை சிவாகம விதிப்படி சிவாசாரியர் (ஆதிசைவ குருக்கள்) சிவாக்கினி உண்டாக்கிப் பூசித்த அச்சிவாக்கினி ஆகிய பரணி தீபத்தைக் கொண்டுவந்து இட்டுச் சோதி தரிசனம் (கார்த்திகை தீபம்) காட்டப்பெறும். அதுபோது அருணாமாநகரம் எவ்விடங்களிலும், வீடுகளிலும் தீப ஒளிப் பிரகாசம் வீசும்; அர அர ஒலி முழக்கம் வானளாவி ஒலிக்கும்.

இத்திருவண்ணாமலைத் தலத்தில் திருக்கார்த்திகை நாளில் திருமலைமீது ஏற்றும் தீபத்தை (கார்த்திகைதீபத்தை)த் தரிசித்து வணங்கியவர்கள், உலகில் பசி, பிணி இன்றிப் பெருஞ்செல்வத் துடன் சுகவாழ்வு வாழ்வார்கள். அவர்களுக்கு நேர்ந்த பற்பல இடையூறுகள் நீங்கும்; தீபதரிசனம் செய்தவரது இருபத்தோரு தலைமுறை வரையில் உள்ளவர்கள் யாவரும் இந்திரச் செல்வம் பெற்று இறுதியில் முத்திச் செல்வம் பெறுவர் என நூல் கூறும்.

“கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
 மலைநுனியில் காட்டா நிற்போம்
வாய்த்தஅந்தச் சுடர்காணில் பசிபிணியில்
 லாதுஉலகில் மன்னி வாழ்வார்:
பார்த்திபர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
 தவிரும்இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கும்
 முத்திவரம் கொடுப்போம்” என்றார்.

— அருணாசலபுராணம்.

இக்கார்த்திகைத் தீப தரிசன விழா கழிந்த மறுநாள் விடியற்காலை 4-மணிக்கு எல்லாம் அருள்மிகு அருணாசலேசுவரர் உண்ணாமுலை உமையாள், விநாயகர், முருகன், சண்டேசுவரர் ஆகிய பஞ்ச மூர்த்திகளும் புறப்பட்டு கிரிவலம் வருவர். தை மாதம் மாட்டுப்பொங்கல் இரவு 2-மணிக்கு எல்லாம் அருள்மிகு அருணாசலேசுவரர் (சோமாஸ்கந்தர்) மட்டும் புறப்பட்டு கிரிவலம் வருவர். இஃது, “அவனேதானே ஆகி” என்ற சிவஞானபோத சூத்திரப்படி இறைவன் தன்னைத்தானே வலம் வருதல் என்ற ஐதீகம் ஆகும். இது மலையின் தெய்வத் தன்மையைக்குறிப்பதாம்.

மிகப்பெருமை வாய்ந்த அண்ணாமலைத் தலத்திற்கு கி.பி 15-ஆம் நூற்றாண்டு இறுதிவரைத் தமிழில் தலபுராணம் ஒன்றும் இல்லை. ஆனால் வடமொழியில் “அருணாசல மான்மியம்” என்ற ஒரு நூல்மட்டும் இருந்துவந்தது. அது திருவருணைச் சிறப்பினை

"சோணாசலத்தில் உயர்ந்த க்ஷேத்திரம் இல்லை" என்று பேசுகிறது.

## திருவருணைச் சோழசமுத்திர ஏரி :

அருணைமாநகரின் தென்பகுதி இறுதியில் திருமலையினை வலம் வரும் பெருவழியில் சுமார் 2-கல் தொலைவில் பலாகுத்து (பலகொத்து) என்ற ஆதி நந்தவனத்தையும், காட்டுத்திரௌபதி அம்மன் (பஞ்சபாண்டவர்) கோயிலையும்ஒட்டியதிருக்கார்த்திகைப் பெருவிழாவில் மாட்டுச்சந்தை கூடும் பெருவெளிக்கு நேர் கிழக்கே சுமார் 6-பர்லாங்கு தொலைவில் வடக்குத் தெற்கில் மிக நீண்டு (ஒருகல்நீண்டு) அகன்று பார்ப்பதற்குக் கடல் போல நீர் நிறைந்து நின்று அதன்கீழ் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு நீர் பாயும் பெரிய பாசன ஏரி ஒன்று உள்ளது அது சோழ (சோள) சமுத்திர [ஏரி எனப் பெயர்பெறும்.

## சோழசமுத்திரக் கிராமமும் பெருமாள் கோயிலும் :

சோழசமுத்திர ஏரி வடகோடி இறுதியிலே வளமான சமுத்திரக்கிராமம் என்ற ஒரு சிறு கிராமம் இருந்து வந்தது. அங்கு வடகலை வைணவ அந்தணர்கள், வைதிக அந்தணர்கள் வேளாளர் முதலிய பற்பல வகுப்பினர்கள் வாழ்ந்துவந்தனர். இச் சமுத்திரக்கிராமத்து ஆதி திராவிடர் சேரி மட்டும் திருவண்ணாமலையின் நேர் தெற்கே தாமரைக் குளத்தின் கீழ்பால் சிறிது தூரத்தில் சாத்தனூர் செல்லும் பெருவழியின் கிழக்கே சுமார் ஐந்நூறு குடிகளுக்குக் குறையாமல் இன்றும் இருந்து வருவது கண்கூடு.

இச்சமுத்திரக் கிராமத்தின் இடையிலே அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி உடனாகிய வேணுகோபாலப்பெருமாள் கோயில் ஒன்று தெற்கு நோக்கிய சந்நிதியாக - கருங்கற்களால் ஆகிய சற்றுப் பெரிய கோயிலாக கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் விஜயநகர நாயக்க மன்னர் ஆட்சிக்காலத்தில் அவர்களின் உதவி ஆதரவில் - மிக உன்னத நிலையில் செல்வச் சிறப்புடன் இருந்துவந்தது. இப் பெருமாள் ஆலயம் நான்கு கால பூசையும் விசேட உற்சவாதிகளும் நடைபெற்று வந்தன. இவ்வாலயத்திற்கு ஆழ்வாராதிகள் மங்களாசாசனம் ஒன்றுமில்லை.

இச்சமுத்திரக்கிராமத்தின் மேல்பால் சற்றுத் தொலைவில் உள்ள பலா கொத்து நந்தவனமும், காட்டுத்திரௌபதி யம்மன் கோயிலும் பெருமாள்கோயிலைச் சேர்ந்தவை. இத்திரௌபதி யம்மன் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் மகாபாரதம் என்னும் இதிகாச நூல் பல நாட்கள் படித்து இறுதி நாளில் நெருப்பு மிதித்தல் என்ற பெருவிழா நடைபெறுமாம். (தொடரும்)

# செய்திகள்

## தருமையாதீனத்தில் ஆவணிமூல விழா

தருமையாதீனம் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமான். சொக்கநாதப்பெருமானுக்கு உகந்தநாள் ஆவணி மூலத் திருநாள். இந்நாளையொட்டி மதுரையில் பத்து நாள் பெருவிழா நடைபெறும். அதே போன்று பத்து நாட்களிலும் ஆதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும். ஆவணிமூலம் பெருமான் வந்தியம்மைக்காகக் கூலி யாளாகவந்து மண் சுமந்த திருநாள் ஆதலின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ, அபிஷேக, ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்குவதோடு தகுதி வாய்ந்த அறிஞர் ஒருவருக்குப் பட்டம் அளித்து, ஆசியருள் வார்கள். இந்நிகழ்ச்சியை யொட்டி ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் நிகழ்த்தப்பெறும். இவ்வாண்டு ஆவணி மூல விழாவும் ஆதீனக்கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் 1, 2, 3—9—76 ஆகிய மூன்று நாட்களும் சிறப்பாகக்கொண்டாடப் பெற்றன.

1—9—76 புதன்கிழமை மாலை 3-மணியளவில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில், தொல்காப்பியத் திருநாளின் முதல் நாளாக எழுத்ததிகாரம் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி M. A., அவர்கள் "எழுத்ததிகார அமைப்பும் அழகும்" பற்றியும் தருமபுரம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் "எழுத்ததிகார உரைகள்" பற்றியும் உரையாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளிச் சிறுவர், சிறுமியரால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2—9—76 வியாழக்கிழமை மாலை 3-மணி அளவில் வேத சிவாகம பாடசாலை தேவாரப்பாடசாலை ஆண்டு விழா நிகழ்வுற்றது. தொல்காப்பியத் திருநாளின் இரண்டாம் நாளாகிய அன்று தருமை யாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியை,

வித்துவான்; திருமதி ப. நீனா M. A. அவர்கள் "சொல்லதிகார அமைப்பும் அழகும் " பற்றியும், தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் M. A. அவர்கள் " சொல்லதிகார உரைகள்" பற்றியும்விரிவுரை ஆற்றினர். தருமை யாதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்களால் இசைநிகழ்ச்சி நடத்தப் பெற்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவியரால் நடனநிகழ்ச்சியும், மாணவர்களால் "வேண்டாம் வரதட்சிணை" என்ற நாடகமும் நடத்தப்பெற்றன.

## வழிபாடும் நூல் வெளியீடும் :

3—9—76 வெள்ளிக்கிழமை ஆவணிமூல நன்னாள். அன்று காலை சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. விழா மலராக " இந்து மத பாலபாடம்" என்னும் நூல் வெளியிடப்பெற்றது. வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர் களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதம், விழா மலர் இவற்றை வழங்கியருளினார்கள்.

## பட்டமளிப்பு :

மாலை 6-30 மணி யளவில் ஸ்ரீசொக்கநாதப்பெருமான் பூஜை மடத்தில் தருமை யாதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் டாக்டர் திரு. பா. நடராசன் M.A. Ph. D. அவர்களுக்கு "பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள்.

அன்று மாலை 7-மணி முதல் நடைபெற்ற ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆண்டு விழா, சைவ சித்தாந்தக் கல்லூரி ஆண்டு விழாக்கள் நடைபெற்றன. தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆதீனக்கல்விநிலைய மாணவ மாணவியர் களுக்குப் பரிசுகள் வழங்கி ஆசியுரை வழங்கியருளினார்கள்.

மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தருமை யாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல், டாக்டர் திரு. சோ. சிங்காரவேலன் M. A., Ph. D., அவர்கள் "பொருளதிகார அமைப்பும் அழகும்" பற்றி விரிவுரையாற்றினர்.

"பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற சிறப்புப்பட்டம் பெற்றடாக்டர் திரு. பா. நடராசன் M.A. Ph. D. அவர்கள் தமக்குச்

பட்டமளித்துச்சிறப்பித்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிக் கமலங்களுக்குத் தமதுபோற்றியுரையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

விழாவின் நிறைவில் தருமையாதீனம் பல்கலைக்கல்லூரி மாணவர்களால் 'சிலம்பில்மிகுதியும்பாராட்டப்படுவது கண்ணகி கற்பு நலமா, மாதவி கற்பு நலமா?' என்ற பொருளில் பட்டி மண்டபம் நிகழ்த்தப்பெற்றது. விழாவில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு விரிவுரைகளைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

## தருமையாதீனத்தில் ஏகதின லட்சார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா பரமேஸ்வரி திருக்கோயிலில் 18—8—76 ஆடி கடைசி வெள்ளிக்கிழமையன்று உலக நலங்கருதி ஏகதின லட்சார்ச்சனை நடைபெற்றது. அன்று காலை லட்சார்ச்சனை தொடங்கி மாலையில் நிறைவுற்றது. அன்று துர்க்காபரமேஸ்வரிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்களாலும் ஆதீன திருமுறை வகுப்பு மாணவ, மாணவிகளாலும் அபிராமி அந்தாதி பாராயணம் நிகழ்த்தப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டு அம்மையருள் பெற்றனர்.

## ஸ்ரீஞானம்பிகைக்குச் சந்தனகாப்பு அலங்காரம்

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ ஞானபுரீஸ்வரருக்கும், ஸ்ரீ ஞானம்பிகைக்கும் 18—8—76 ஆடி கடைசி வெள்ளிக்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ ஞானம்பிகையம்மைக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளாலும், பக்தர்களின் பெருமுயற்சியாலும் சந்தனகாப்பு அலங்காரம் சிறப்பாகச்செய்யப்பெற்றது. சந்நிதியில் புஷ்ப பந்தல் அமைத்து அழகு செய்யப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப்பிரசாதம் வழங்கினார்கள். அன்பர்கள் அம்மையை வழிபட்டு அருள் பெற்றனர்.

## மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் திருக்கோயிலில் 27—8—76 வியாழக்கிழமையன்று சந்தானச்சாரியருள் ஒருவராகிய

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர், சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலை தருமை யாதீனத் தமிழ்ப்புலவர், திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்கள் 'வினா வெண்பா' என்பது பற்றி விரிவுரையாற்றினர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## ஆவணி மாத ஜன்ம நட்சத்திர விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்ய நாளன்று 24—8—76 செவ்வாய்க்கிழமை திருஎதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ்சேரி) ஸ்ரீ மலர்க்குழல்நாயகி உடனுகிய ஸ்ரீ அயிராவதநாதர் திருக்கோயிலிலும், கீழைத் திருமணஞ்சேரி ஸ்ரீ யாழினும் மென்மொழியம்மை உடனுகிய ஸ்ரீ அருள்வள்ளல் நாதர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடு நடைபெற்றது. 'திருஎதிர்கொள்பாடி திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப் பெற்றது. திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப் பெற்றன. அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

### சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை தருமை யாதீனப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 19—8—76 வியாழக்கிழமை யன்று நிலைய மன்றத்தில் நிகழ்வுற்றது. சென்னை C. I. D. பிராஞ்ச் D. S. P. திரு P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். செல்வ முத்துக்குமாரசுவாமி திருவுருவப் படத்திற்கு வழிபாடு செய்யப்பெற்றது. நிலைய ஓதுவார் S. ஞானப்பிரகாசம் வேலூர்த் திருப்பதிகங்களைப் பாடினர். நிலைய சுவாமிகள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர். விழாத் தலைவர், "முருகன் திருவடிகளைப் பற்றிக்கொண்டு எந்நேரமும் 'முருகா முருகா' என்று சொன்னால் இறைவனோடு ஒன்று படலாம் என்று கூறி இத்தகைய விழாக்களுக்கு ஏற்பாடு செய்யும் தருமை யாதீனத் திற்குத் தம் கடப்பாட்டை எடுத்துரைத்தார். பிரசார நிலையம் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் விழாவை உடனிருந்து

நிகழ்த்தி வரவேற்புரை நன்றியுரைகள் கூறினர்கள். இறை வாழ்த்துடன் விழா நிறைவுற்றது. விழா நிறைவில் பிரசாதம் வழங்கப்பெற்றது.

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

சென்னை தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப்பிரசாரவழிபாடு 29—8—76 ஞாயிற்றுக்கிழமை யன்று சென்னை அரண்மனைக்காரத்தெருவிலிருக்கும் ஸ்ரீ கச்சாலீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் முறைப்படி அபிஷேகம் செய்யப்பெற்றது. பின்னர் பிரதான மூர்த்தங்களுக்கு அருச்சனையும் இதர மூர்த்தங்களுக்குத் தீபாராதனையும் செய்யப்பட்டன வழிபாட்டின்போது எல்லா சந்நிதிகளிலும் நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசம் அவர்களும் திருமுறைபயிலும் மாணவ மாணவியரும் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

பின்னர் நடந்த சமயப் பிரசாரக் கூட்டத்தில் சென்னை D. S P. திரு P. V. வெங்கடேஸ்வரன், புலவர் திரு. N இராசு, குமாரி R. கௌரி, திரு. V. N. ஆறுமுகம், நிலையத்தில் தமிழ் வித்துவான் வகுப்பில் பயிலும் திரு. கிருஷ்ணன் ஆகியோர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினர். கோயில் டிரஸ்டியும் சுப்ரீம் கோர்ட் அட்வகேட்டுமாகிய திரு. ஏ. சுப்பிரமணிய ஐயர் சமயப் பிரசார வழிபாடு செய்யப்பட்ட முறைமையைச் சிறப்பித்துப் பாராட்டிப் பேசினர்கள். பின்னர்பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் விநாயகசதுர்த்தி, ஆவணிமூல விழாக்கள்பற்றிப் பேசிய பின் கூட்டம் நிறைவுற்றது.

## குருபூஜை விழாக்கள்

சென்னை தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தில் பெருமிழலைக்குறும்பர், சேரமான் பெருமாள், கலியநாயனர், கோட்புலியார், செருத்துணையார், புகழ்த்துணைநாயனர், அதிபத்தர், இளையான்குடி மாறர், மறைஞானசம்பந்தர் குருபூஜை விழாக்கள் ஆகஸ்டு மாதத்தில் முறையே 1, 2. 5, 23, 24, 25, 27 தேதிகளில் நடைபெற்றன. புலவர் திரு. அம்மையப்பன் பெரிய புராணத்தில் நாயன்மார்களின் புராணத்தைப் படித்து விளக்கம் செய்தார். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும் அன்பர் பலரும் கேட்டுப் பயனடைந்தனர்.

## பெரியபுராண விரிவுரை

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் ஆகஸ்டு மாதம் 1, 8, 22 தேதிகளில் காலை 10-30 மணி முதல் நிலைய மன்றத்தில் திரு. S. சிவகுமார் அவர்களால் பெரியபுராண விரிவுரை நடத்தப்பட்டது. திருஞானசம்பந்தர் புராணம் நடந்துவருகிறது. அன்பர் பலர் கேட்டுப் பயனடைகின்றனர்.

## திருக்கோவையார் விரிவுரை

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலைய மண்டபத்தில் 2—8—76 அன்று தருமை ஆதீனப்புலவர் திரு. N. R. முருகவேள் அவர்களால் திருக்கோவையார் விரிவுரை தொடங்கப்பெற்று 16, 23, 30 தேதிகளில் விரிவுரைகள் மாலை 7-மணி முதல் நடைபெற்றன. அன்பர்கள் பலர்கலந்து கேட்டுப்பயன்பெறுகின்றனர்.

## காடூரில் மகாகும்பாபிஷேகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், காடூரில் ஸ்ரீ காமாட்சியம்மை உடனுகிய ஸ்ரீ சௌந்தரேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீ தேவி, பூதேவியர்கள் உடனுகிய ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில், ஸ்ரீ தாரணி புஷ்கலா தேவியர்கள் உடனுகிய ஹரிஹரபுத்திரர் திருக்கோயில்களிலும் ஏனைய கிராம தேவதைகளின் திருக்கோயில்களிலும் 5—9—76 ஞாயிற்றுக் கிழமை காலை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகம் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் காடூர் திரு. எஸ். நடராசப்பிள்ளை அவர்களின் பெருமுயற்சியால் நடைபெற்றது. திரு. நடராசப்பிள்ளை அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினர்கள். காடூர் எல்லையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை திரு. நடராசப்பிள்ளை அவர்களும் மற்றும் பல பெருமக்களும் இன்னிசை வாத்ய முழக்கங்களுடன் வணங்கி வரவேற்றுர்கள்.

ஸ்ரீ சௌந்தரேஸ்வரர் யாகசாலை பூர்ணுகுதி வழிபாடு நிகழ்த்தியபின்னர் கடம் எழுந்தருளியாயிற்று. பின்னர் காமாட்சியம்மை உடனுகிய ஸ்ரீ சௌந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீ காமாட்சியம்மை சௌந்தரேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்குப் பரிவட்டங்கள் சாத்தச் செய்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

பின்னர், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை நாதஸ்வர இன்னிசையுடன் கொலுவில் எழுந்தருளச்செய்து வழிபாடு நிகழ்த்தி பக்தர்கள்பலரும்வணங்கி பிரசாதப்பெற்றுமகிழ்ந்தனர். திரு. நடராசப்பிள்ளை அவர்கள் வரவேற்புரை ஒன்றுவாசித்தளித்தார்கள். கிராம மக்கள் சார்பிலும் வரவேற்புக் கவிமலர் ஒன்று வாசித்து அளிக்கப்பட்டது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கி காடூர், திரு. சு. நடராசப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி ஆசியருளினார்கள். காடூர் பிள்ளை அவர்களின் பெருமுயற்சிக்கு உறுதுணையாய்நின்ற திரு. குமரவேல் பிள்ளை அவர்கட்கும் பட்டாடையளித்து ஆசியருளினார்கள். வரவேற்பு விழாவிற்கு வந்திருந்தோர் அனைவர்க்கும் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன. அரியலூர் மணிவாசக மன்ற உறுப்பினர் திரு.சோமசுந்தரப்பிள்ளை அவர்கள் நன்றியுரைக்குப் பின்னர் இறை வாழ்த்துடன் விழா நிறைவுற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமைக்கு எழுந்தருளினார்கள்.

---

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் நள ஆண்டு புரட்டாசித்திங்கள் 5-ஆம் நாள் (21—9—76) செவ்வாய்க்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குறுக்கை ஸ்ரீஞானம்பிகை உடனுறைகிய ஸ்ரீவீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வமயம் திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெறுவதுடன் திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெறும். அன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக

அன்று, ஆதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்கள் உழவாரப்பணி செய்வார்கள்.

**கடிதங்கள் :**

க. வெள்ளைவாரணன்,
துணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

142, கனகசபை நகர்,
சிதம்பரம்.
2—9—76.

திருவாளர். டாக்டர் பா. நடராசன் எம். ஏ., பி.எச்.டி, அவர்கள் 'பொருளியல்தத்துவப்பேரறிஞர்' என்னும் சிறப்பினைப் பெறுவது என்போன்றார்க்குப் பெருமகிழ்ச்சியை விளைக்கும் நிகழ்ச்சியாகும். செந்தமிழும் சிவநெறியும் வளம்பெறத் தொண்டாற்றும் அறிஞர் பெருமக்களின் அறிவியற் பணிகட்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியருளும் நிலை போற்றுதற்குரியது.

க. வெள்ளைவாரணன்.

* * * * *

Prof. P. Thirugnanasambandan M.A., (sanskrit) L. T.,
Director (Sanskrit Division)
11, Sambasivam Street, Thyagarayanagar, Madras. 2—9—76;

இவ்வாண்டு ஆவணிமூலத் திருநாளன்று நமது அன்பர் டாக்டர் திரு. பா. நடராசன் அவர்கள் "பொருளியல் தத்துவப் பேரறிஞர்" என்ற பட்டம் அளிக்கப்பெற்று, நமது ஆதீன குருமகாசந்நிதானத்தின் அருளுக்குப் பாத்திரராக இருப்பது இன்றைய பொருளாதார முக்கியத்துவம் பெற்ற ஆண்டில் பொருத்தமான அருட்செயல். ஆதீன குருமகாசந்நிதானத்திற்கு எனது பணிவான வணக்கம்.

பெ. திருஞானசம்பந்தன்.

* * * * *

கி. வா. ஜகந்நாதன்,

காந்தமலை, சென்னை 28,
2—9—76.

பண்முக மேந்தும் தமிழ்மறை ஓசை, பனவர்களின்
எண்முக மில்லா மறையோசை, ஆகம இன்னொலிகள்
விண்முக மேலும் தருமையா தீனத்து மெய்க்குரவர்
சண்முக தேசிகர் எந்நாளும் வாழ்கெனச் சாற்றுதுமே.

டாக்டர் பா. நடராஜன் அவர்கள் மகாசந்நிதானத்தின் அருளுக்குப் பாத்திரராகிப் பட்டம் பெறுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். பொருளியல் தத்துவப் பேரறிஞர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டு நலம் வளரத் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்.

# எதிர்காலம்


ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


( நள ஹு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 17—9—1976 முதல் 16—10—1976 முடிய )

ஸ்ரீ நள ஹு ஆவணி மீ 31உ குருவாரம் மிருகசீர்ஷம் நக்ஷத்திரத்தில் சித்திநாமயோகம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 37 நாழிகை 9 வினாடிக்கு மேஷ லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் சிம்மராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்தருளுகிருர் ஸ்ரீ நள ஹு புரட்டாசி மாதம் 16உ ஸ்ரீ புதபகவான் தனது பரமோச்சஸ்தானமடைந்து ஜெகத்திற்கு ஸாஸ்வதமாகத் திகழ்வார். அதன் பலன் உலகில் சகல கோடி மக்களும் வாழ்வில் அறிவுத்துறையில் உயர்படியில் திகழ்வார்கள். உலக நாடுகளில் மன்னர்கள் ஜனத்தலைவர்கள் பிரஜா சுபிட்சம் கருதி நடுவு நிலைமை கோட்பாடுகளில் பரிபாலனம் நடத்துவார்கள். தேசங்களில் எங்கும் புதிய கல்வி நிறுவனங்கள் ஏற்படும். சிற்பம், ஓவியம், சங்கீதம் நடனக்கலைகள் நாகரீக வளர்ச்சியுற்றுச் சிறக்கும். தொழில் விற்பன்னர்கள் விஞ்ஞான முன்னேற்றமாகக் குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகளையும் வஸ்திரங்கள், ஆபரணங்கள், வீட்டு உபயோகத்திற்கான பாத்திரம் மற்றும் அலங்கார நாகரிக வஸ்துக்களையும் புதிய மாதிரி பொருள்களாகப் படைத்து வெளியிடுவார்கள்.

அறநிலையங்களில் அறநெறியாளர்கள் தெய்வ கைங்கரியங்களைச் செய்வித்து ஆஸ்திகமக்களின் தெய்வீகத்துக்கு அநுகூலம் செய்வார்கள். திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திகழ்கின்ற சமய குருமார்கள் ஆற்றி வருகின்ற திருத்தொண்டின் அருள் பிரசாதமாகத் திருவாய்மலர்ந்து விளம்புகின்ற அருளுரைகளின் புனித வழியில் இவ்வுலகம் இயங்கும். தேவாலயங்களில் தேவாராதனைகள் சிறப்புப் பூசைகள் நடைபெற்றுவரும்.

உலகெங்கும் சிவ சமயம் பரவும், பிரஜைகள் ஆஸ்திக வழியில் பேறுடன் வாழ்வார்கள்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை $\frac{1}{4}$

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனாக நடந்து வரும். விசேஷமான பொன் பொருள்களையளிக்கும். கொடுக்கல் வாங்கல் லேவாதேவிகள் பெருமதிப்பாக இருந்துவரும். சகோதர சௌக்கியம் தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ரோகம் குணமாகும். சந்துஷ்டியாதி நற்கிரியைகள் சிறப்பாக நடந்துவரும். வழக்கு விவகாரங்களில் ஸ்திர . சொத்துக்களில் இருந்த சிக்கல் இம்மாதம் 16 உ க்கு மேல் நீங்கி ஜெய பிராப்தியாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் செயல் முறைகள் திறம்பட நடந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனாதி சௌகரியங்களில் குறைவின்றி குடும்பத்தில் சம்பிரதாய விசேஷங்கள்யாவும் நடந்துகொண்டிருக்கும். சகோதரர்களுக்கு இம்மாதம் பிற்பகுதியில் ஓர் முன்னேற்றம் தரும். புத்திரர்களின் கல்வி கலையில் தொழில் துறையில் பிரசித்தமும் ஓர் அளவு பண வரவும் ஏற்படும். இம்மாதம் 16உ க்கு மேல் யத்தனித்த காரியங்களில் சித்தியும் மேலோர் பெரியோர்களினால் அனுகூலங்களும் ஏற்படும். ரோகங்கள் நிவர்த்தியாகி சௌக்கிய பலன் தரும். கணவன் மனைவியின் வாழ்வில் சுமுகம் நிலவும், செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முதன்மைதரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை–புனர்பூசம் $\frac{3}{4}$

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9பாதங்களும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். தனச்செலவாணி சீராக இருந்துவரும். நேர்மையை வற்புறுத்துவதில் தன் வார்த்தை சமூகத்தினருக்கு வெறுப்பாகத்தோன்றும். சகோதரர்களுக்கு சௌக்கிய பலனும் பிரசித்தமும் ஏற்படும். சுக சௌகரியங்களில் குறைவின்றிஇல்லத்தில்எல்லாச்சம்பிரதாய

விசேஷங்களும் தான தர்மங்களும் நடந்துவரும். புண்ணிய ஸ்தல யாத்திரிரை தெய்வ தரிசனம் ஆகிய புண்ணிய பலன் கிடைக்கும். தாம்பத்திய வாழ்வில் சுகம் மேலிடும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புகழாக நடந்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை நடக்கும். தன சௌகரியம் மேலிடும். குடும்பத்தில் இலட்சுமிகரமான வைபவங்கள் நடக்கும். சகோதர சகோதரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். சிவப்புமரகதக்கற்கள் பதித்த ஆபரண பிராப்தி உண்டாகும். திடசித்தம், உறுதியான தேவதாபக்கி, கீத வாத்தியங்களில் ரசிப்பு ஆகிய பான்மை ஏற்படும் பூமியில் இயந்திர சாதனங்களில் நற்பலன் உண்டாகும். தார புத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பூர்வீக சொத்தி லிருந்து ஒர் ஆதாயம் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தி யோகம் சிறப்பாக நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை நடக்கும். தனச் செலாவணி சரளமாக இருந்துவரும். சகோதரர்களுக்கு சௌக்கிய பலனும் உயர்வும் தரும். பந்துமித்திரர்களின் வருகையும் உபசரணையும் நடக்கும். சமூகத்தினரிடையே நன் மதிப்பை ஏற்படுத்தும். பூ பாக்கியம்பெருகும். இயந்திர சாதனங் களில் நற்பலன் தரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஸ்லாக்கிய பலன் தரும். சனி ஞாயிறு சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். தனப் பாக்கியம் விருத்திகரமாக இருந்துவரும். குடும்ப நலன் பெருகும். சகோதரர்களுக்குத் தொழில் துறையில் சற்று சிரமத்துடன் நன்மைகளையளித்துவரும். இல்லத்தில்மகிழ்ச்சியான

சம்பவங்கள் நடக்கும். சரீரத்தில் உஷ்ண நிக்கமாகத் தொண்டைப் புண் போன்றவை வந்து குணமாகும். புத்திரர்களுக்குக் கல்வி தொழில் துறையில் உயர்வு தரும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பதவி மாறுதல் ஏற்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். சுயவருமானம் சீராக இருப்பினும் பிறர் பொருளுக்கு அதிபதித்துவம் தரும். நம்பிக்கை நாணயம் மதிப்புடன் இருந்துவரும். பெற்றோர் பந்து அம்மான் இவர்களின் நலன் கருதி செலவுகள் இருந்துவரும். தார புத்திரர்களின் சௌக்கியம் சாதாரணமாக இருந்துவரும் செய்தொழிலில் மந்த நிலைமையாகத் தோன்றும் எல்லா விஷயங்களிலும் காலதாமதம் ஏற்படினும் காரியங்கள் திருத்தமாக நடைபெறும். புதன் வியாழன் சுபமாகும்.

## 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலன் தரும். தன சௌகரியமும் குடும்ப கௌரவமும் மேலாக இருந்துவரும். சகோதரர்களின் தொழில்துறை சிறந்து விளங்கும். பூமி இயந்திர வகையில் பொருள் செலவு ஒருபுறம் இருந்துவரும். வித்துவத்துவம் கலை எழுத்துத் துறையில் திடீரென நற்பலன் உண்டாகும். அரசாங்கத்தின் மூலம் நன்மைகள் ஏற்படும். பெண்கள் வகை சுகவிருத்தியில் இடையிடையே அலைச்சலும் ஆயாசமும் தோன்றினும் அவ்வகை விசுவாசமும் ஒத்துழைப்பும் இருந்துவரும். எதிர்ப்புக்கள் நீங்குவதாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இலாபம் உடையதாக இருந்துவரும். வெள்ளி சனி சுபமாகும்.

## 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடந்துவரும். குடும்பாபிவிருத்தி, சுயவருமானம் சீராக இருந்துவரும். பரோபகாராதி சமூக சேவையில் பிரசித்தம் ஏற்படும். சகோதரர்களுக்கு ஒருவிதத்தில் சிரமம் இருப்பினும் ஜீவனோபாய தொழில் துறையில் நற்பலன் கிட்டும். வீடு மனை விஷயமாக சர்ச்சைகள் எழும். புத்திரருக்குத் தந்தவாயு இரத்தக்கட்டி போன்ற நலிவு ஏற்பட்டுக் குணமாகும். கணவன் மனைவியின் வாழ்வில்

சுகமும் மகிழ்ச்சியும் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புத்தி சாதுரியமாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

### 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். தனுதி சௌகரியங்களில் குறைவின்றி விருத்தியாகவே இருந்து வரும் சகோதரருக்கு சௌக்கிய பலன் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கியமும் கல்வி கலை தொழில் துறையில் நற்பலனும் தரும். மனைவிக்கு பித்தமயக்கம் போன்ற நலிவு ஏற்பட்டுக் குணமாகும். தெய்வானுக்கிரகத்தினால் முயற்சித்தஎல்லாக்காரியங்களும் சித்தி பெறும். பழைய இருணங்கள் தீர்ந்து புதியன ஏற்படும். பூமியில் இயந்திர சாதனங்களில் நற்பலன் ஏற்படும். செய்தொழில் புகழாக இருந்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸூ. – ஸே. ஸோ. த.)

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும் தன பாக்கியம் விருத்தியாக இருந்துவரும். சகோதரர்களுக்கு சௌக்கியமும் இராசாங்கசுகமும் உயர்வும்தரும். கட்டிடவசதியில் புதுமையாக சீர்திருத்தம், அலங்காரம் ஆகிய நவீனம் ஏற்படச் செய்யும். புத்திரர்களுக்கு கல்வி, கலை, தொழில் துறையில் முன்னேற்றம் தரும். மேலோர் பெரியோரால் நன்மை ஏற்படும். கணவன் மனைவியின் வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். தெய்வ பக்தி மேலிடும். செய்தொழில் அல்லதுஉத்தியோகத்தில் அலுவல்கள் எளிதில்முடிந்து அமைதிதரும். வியாழன் வெள்ளிசுபமாகும்.

### 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடந்து வரும். தன சௌகரியம் மதிப்புடன் இருந்துவரும். சகோதர சகோதரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வாசஸ்தலத்தில் மனதிருப்தியின்றி புதிய ஏற்பாடுகளைச் செய்யநேரும். புத்திரர்களின் நிலைமையில் மனக்குழப்பமாக இருந்து தீரும். மனைவிக்கு உஷ்ணரோகம்வந்து உடன் குணமாகும். சனீசுவர பகவானுக்கு அருச்சனைசெய்ய சகல அல்லல்களும் நீங்கி சுபம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் விகுவுடன் செயல்படுத்தும். ஆற்றல் மிகும். காரிய சாதனைகளை ஏற்படுத்தும். சனி ஞாயிறு சுபமாகும்.

---